Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 250 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 18, சனி 03.08.2013

## ஆசியாவிலேயே அதிகளவு இராணுவம் நிலைகொண்டுள்ள பிரதேசமாக வடக்கு

'கபே' அமைப்பு கூறுகிறது



கொழும்பு, ஓக. 03
ஆசியாவில் அதிகளவான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பிரதேசமாக வடக்கு பிரதேசத்தைக் கருத முடியும் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் வடக்கு மாகாணத்தின் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு மிகவும் அதிகளவிலான இராணுவத்தினர் உள்ளனர். சரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் ஆசியாவில் அதிகளவான இராணுவம் நிலை கொண்டுள்ள பிரதேசமாக இலங்கையின் வடக்குப் பிரதேசத்தைக் கருத முடியும். வடக்கில் இராணுவம் சிவில் நிர்வாகப் பணிகளில் ஈடுபடுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 21

## போதைப் பாக்கு விசாரணை உத்தியோகத்தர் மீது தாக்கு

இனந்தெரியாதோர் நேற்றிரவு கைவரிசை

கொழும்பு, ஓக. 03
யாழ்.குடாநாட்டில் பரவலாக இடம்பெற்று வரும் போதைப் பாக்கு விநியோகம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றிரவு தாக்கப்பட்டார்.
அண்மைக் காலமாக குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களைக் குறிவைத்து போதைப் பாக்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக யாழ்.நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் யாழ்.பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகள் இருவர் விசாரணைகளை நேற்று மேற்கொண்டனர். இவர்களில் ஒருவரே நேற்றிரவு தாக்குதலுக்கு

தொடர்ச்சி: பக்கம் 21

# குடாநாட்டில் ஜனநாயகச் சூழல் முகாமுக்குள்ளேயே படையினர்

## கூட்டமைப்பின் குற்றச்சாட்டை நிராகரித்தது அரசு



கொழும்பு, ஓகஸ்ட் 03
வடக்குத் தேர்தலில் இராணுவ அச்சுறுத்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டை நேற்று நிராகரித்துள்ள அரசு, இராணுவத்தினர் முகாம்களில்தான் உள்ளனர். பொலிஸார்தான் வீதியிலுள்ளனர். குடாநாட்டில் ஜனநாயக அமைதிச் சூழல் நிலவுகிறது. அங்கு ஒரு பதுங்கு குழி இருந்தால் காட்டுங்கள் என்றும் சவால் விடுத்துள்ளது.

"வடக்குத் தேர்தல் முடிவால் என்ன நடக்கும் என்று அறிந்தே நாம் தேர்தலுக்குத் தயாராகியுள்ளோம். வடக்குத் தேர்தலோ தமிழ்க் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரோ எமக்குச் சவால் அல்ல" - என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அரசின் வடக்குத் தேர்தல் குழுத் தலைவருமான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

வடக்குத் தேர்தலில் 30 அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளன. இதுதான் ஜனநாயகத்தின் முதல் சாட்சி. அங்கு ஜனநாயக சூழல் நிலவுகிறது. இந்நிலையில், பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்பவர்களுக்குச் செப்டெம்பர் 21ஆம் திகதி வடக்கு மக்கள் தக்க பதிலளிப்பர் என்றும் சுசில் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1988ஆம் ஆண்டின் பின்னர் 25 வருடங்களையடுத்து இப்போதுதான் வட மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த விவகாரத்தில் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியை நிலைநிறுத்தவே வடக்கில் நாம் போட்டியிடுகிறோம்.

வடக்குத் தேர்தல் 30 அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. இதுதான் அங்கு நிலவும் ஜனநாயக ஆட்சிக்கு முதல் சாட்சி.

தமது வேட்பாளர்களுக்கு இராணுவத்தால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை. சேனாதிராசா குற்றஞ்சாட்டியிருந்தார்.

வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்குள்ளேதான் இருக்கின்றனர். பொலிஸார்தான் வீதியில் உள்ளனர். இவ்வாறான நிலையில் மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசாரங்களுக்கு செப்டெம்பர் 21ஆம் திகதி மக்கள் தக்க பதிலளிப்பர் - என்றார் சுசில். (த-சி)

பிற மாநிலங்களுக்கு தமிழகம் முன்னோடி – பிரதமர் 06

ஸ்நோடனுக்கு ரஷ்யா தற்காலிக அடைக்கலம் 07

கிண்ணம் வென்றது ஸ்ரீகாமாட்சி 22

சொந்த மண்ணிலேயே இலங்கை தென்னாபிரிக்காவிடம் கவிழ்ந்தது 23

## வெலிவேரிய தாக்குதல் குறித்து சுயாதீன விசாரணை வேண்டும்

நாடாளுமன்றில் கேள்வி எழுப்புவோம் என்கிறார் ரணில்

கொழும்பு, ஓக. 03
வெலிவேரிய ஆர்ப்பாட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் குறித்து சுயாதீன விசாரணையை உடன் நடத்தவேண்டுமென அரசை வலியுறுத்தியிருக்கும் எதிர்க் கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, இது விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்படுமென்றும் நேற்று அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் சட்டத்தை மீறி பொதுமக்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டிய அவர், பாதுகாப்புப் படையினருக்கு இந்த அதிகாரத்தை வழங்கியது யார் என்றும் கேள்வி எழுப்பினார்.

வெலிவேரிய மக்கள் நேற்றுமுன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலால் ஒருவர் உயிரிழந்ததுடன், 24 பேர் காய

தொடர்ச்சி: பக்கம் 21

## இராணுவ ஆட்சி நிரூபணம்

கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, ஓக. 03
வடக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதும் இராணுவத்தின் கொடூர ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்கு கம்பஹா - வெலிவேரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கம்பஹா – வெலிவேரிய பகுதியில் நேற்றுமுன் தினம் இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்கள இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், இரு ஊடகவியலாளர்கள் உட்பட 24 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த மிலேச்சத்தன தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ்

தொடர்ச்சி: பக்கம் 21

## கடற்படை முகாமில் வெடிப்பு

கொழும்பு, ஓக. 03
களுத்துறை கடற்படை முகாமில் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. முகாமுக்கு வெளியே இருந்து வெடிபொருளொன்று வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. முகாமுக்கு உள்ளே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கடற்படையினர் களுத்துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். (த)

## ஆளும்தரப்பு வேட்பாளர்களுடன் மஹிந்த பேச்சு

கொழும்பு, ஓக. 03
மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் களமிறங்கியுள்ள ஆளுந்தரப்பு வேட்பாளர்கள் 172 பேருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று முக்கிய சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மூன்று மாகாணசபைகளின் ஆட்சியை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு கைப்பற்றுவதற்கான வியூகங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அனைத்து வேட்பாளர்களுக்கும் இதன் போது தெளிவுபடுத்தவுள்ளதுடன், நீதியான தேர்த

தொடர்ச்சி: பக்கம் 21

# காணிகள் அபகரிப்புக்கு எதிராக கதிர்காமரின் மகனும் 'ரிட்' மனு

## கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்

கொழும்பு, ஓக. 03

வலிவடக்குப் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள மாவிட்டபுரத்தில் உள்ள தமது பரம்பரைக் காணியை அரசு சுவீகரிப்பதற்கு எதிராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் மகன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'ரிட்' மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தெல்லிப்பழை மாவிட்டபுரத்தில் உள்ள தமது பரம்பரைச் சொத்தை அரசு பொறுப்பேற்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையில் சுற்றுச்சூழல் வடிவமைப்பு ஆலோசகராக 1995 ஆம் ஆண்டு கடமையாற்றிய முறைப்பாட்டாளரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் மகன் எஸ்.ஜே. கிறிஸ்ரியன் கதிர்காமரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

> போர் நிறைவடைந்த பின்னரும் பாதுகாப்பு படையினர் 6381 ஏக்கர் காணிகளைப் பிடித்து வைத்திருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையைச் சேர்ந்த அட்மிரல் ராஜநாதன் கதிர்காமர், இலங்கை இராணுவத்தின் மேஜர் செல்வநாதன் கதிர்காமநாதர், பிரபல இராணி சட்டத்தரணி சாம் கதிர்காமர் ஆகியோர் தனது நெருங்கிய உறவினர்கள் என்றும் அவர் மனுவில் கூறியுள்ளார்.

தனது மூதாதையர் வழிச் சொத்தான இந்தக் காணி, ஆழ்வார் மலையடி மாவிட்டபுரத்தில் உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது நிலம் பொதுத் தேவைக்காகத் தேவைப்படுவதாகக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் ஆனால், இதற்கான காரணம் பாதுகாப்புப் படையணியின் தலைமையகம் அமைத்தல் எனக் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்த பின்னரும் பாதுகாப்பு படையினர் 6381 ஏக்கர் காணிகளைப் பிடித்து வைத்திருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியைப் பொறுப்பேற்கும் அறிவித்தல்கள் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வரவில்லை என்பதையும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது முதுசமான காணியைப் பிரதிவாதி பொறுப்பேற்பதைத் தடை செய்யும் தடையுத்தரவை ஒன்றை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டுமென்றும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார். (த)

# வாகன விபத்தில் இரண்டு பேர் சாவு; மூவர் படுகாயம்



கொழும்பு, ஓக. 03

குருநாகல், மகவ தலதாகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தாய் மற்றும் மகன் உயிரிழந்துள்ளதோடு மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். நேற்று முற்பகல் 11 மணியளவில் காரொன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது இரு பெண்களும் குழந்தை ஒன்றும் காயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# பொலிஸ் அதிகாரிக்கு அடிக்கடி இடமாற்றம்

கொழும்ப், ஓக. 03

தெரணியலை பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பதிகாரியாக அண்மையில் நியமிக்கப்பட்ட பிரபாத் தேசபந்து திடீரென இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதிரடிப்படையைச்சேர்ந்த முன்னாள் அதிகாரியான இவர், 19 தினங்களுக்கு முன்புதான் தெரணிய கலவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அங்கிருந்த வன்முறை கும்பலைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தார்.

தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவரான அனில் சம்பிக்கவின் சகோதரியை நூரி தேயிலைத் தோட்டத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்.

மேலும், தற்போதைய பிரதேச சபையின் தலைவரான அநுர விஜேசூரிய நடத்தி வந்த மதுபானசாலை உத்தியோகபூர்வ அனுமதி இல்லாமல் நடத்தப்பட்டதால் அதனை மூடும்படி உத்தரவிட்டிருந்தார்.


இந்நிலையிலேயே அவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பாப்பரசருக்கு மஹிந்த அழைப்பு

கொழும்பு, ஓக. 03

இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளுமாறு பாப்பரசர் பிரான்ஸிஸுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆசிய நாடுகளுக்கு அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் பயணங்களை மேற்கொள்ளவிருக்கின்ற நிலையிலேயே இலங்கைக்கும் பயணம் செய்யுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கைக்கு பயணம் செய்வது தொடர்பில் கரிசனை செலுத்தியுள்ளதாகப் பாப்பரசர் பிரான்ஸிஸ் கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாப்பரசர் பிரான்ஸிஸ் இலங்கைக்கு வருவாராயின் இங்கு வரும் மூன்றாவது பாப்பரசராக அவர் கருதப்படுவார்.

நான்காவது போல் பாப்பரசர் இலங்கைக்கு 1977 ஆம் ஆண்டு முதன்முறையாக பயணம் மேற்கொண்டார்.

அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல் இலங்கைக்கு வருகை தந்தார்.(த)

# தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார், ஓக. 03

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகக் குற்றம்சாட்டிக் கடற் படையினரால் கைது செய்யப்பட்ட 21 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த 21 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த ஜூலை மாதம் 6ஆம் திகதி கைது செய்தனர்.

அவர்கள் சென்ற 5 படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர். இந்நிலையில், 21 மீனவர்களும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களின் விளக்கமறியலை 6ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் ஆனந்தி கனகரத்தினம் உத்தரவிட்டார். (த-12)

# உயர்தர மாணவருக்கு இடையூறு ஏற்படாவண்ணம் தேர்தல் பிரசாரம்

## கட்சிகளிடம் பிரதித் தெரிவத்தாட்சி அலுவலர் கோரிக்கை

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கோயில் வருடாந்த மகோற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு எந்த வித இடையூறும் ஏற்படுத்தப்படாமல் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு போட்டியிடும் கட்சிகளிடமும், சுயேச்சைக் குழுக்களிடமும் விநயமாக வேண்டிக் கொள்வதாக யாழ்.மாவட்டப் பிரதித் தெரிவத்தாட்சி அலுவலர் சி.அச்சுதன் தெரிவித்தார்.

வட மாகாண சபைத் தேர்தலுக்கான யாழ். மாவட்ட வேட்பு மனுத்தாக்கல் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் நிறைவடைந்த பின்னர், தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்துக்கென தனிச்சிறப்பு பண்பாடு இருக்கின்றது அதனைப் பேணும் வகையில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் செயற்பட.வேண்டும்.

தேர்தல் பிரசாரக் காலங்களிலேயே இங்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைக்கு வருகை தரவுள்ளனர். இதனால் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்காத வகையில் வேட்பாளர்கள் செயற்பட வேண்டும். வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தன் ஆலய மஹோற்சவமும் தேர்தல் பிரசாரக் காலத்தில் இடம்பெறவுள்ளது. இதற்காகப் பல்வேறு இடங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தரவுள்ளனர். இதனைவிட ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை என்பனவும் இதே காலப்பகுதியில்தான் இடம்பெறவுள்ளன. எனவே மேற்குறித்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வேட்பாளர்கள் செயற்பட வேண்டும் என்றார். (த-5)

# அமைதியாகப் போராடும் உரிமைக்கு மதிப்பளிக்கவும்

## இலங்கையிடம் கோருகிறது அமெ.

கொழும்பு, ஓக. 03

வெல்வெரியவில் நேற்று முன்தினம் சுத்தமான குடிதண்ணீருக்காகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதல் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

> உரிமையை இலங்கை அரசு மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைதியாக எதிர்ப்புத் தெரிவிக்கும் பொது மக்களின் உரிமையை இலங்கை அரசு மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், அத்துடன் எல்லாத் தரப்புகளும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

இதற்கிடையே, வெல்வெரியவில் நேற்று முன்தினம் மாலை படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது. (த)

# ஆஸி. செல்ல முயன்ற 39 பேர் நேற்றுக் கைது


கொழும்பு, ஓக. 03

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 39 பேரை மாத்தறைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை கந்தகொட பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்தே இவர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## ஜனாதிபதியின் வருகையால் வீதிகளுக்கும் விமோசனம்



வவுனியா,ஓக.3

வவுனியாவுக்கு ஜனாதிபதி இன்று வருகிறார் என்பதன் காரணமாக இதுவரை காலமும் திருத்தப்படாதிருந்த வீதிகளை அவசர அவசரமாக திருத்தத் தொடங்கியுள்ளமை அந்தப்பகுதி மக்களுக்கு வேடிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி வருகையையொட்டி நேரியகுளம் வீதியில் புதையல்பிட்டி, விநாயகபுரம், இராசேந்திரம் குளம் வரையிலான 3½ கி.மீ தூரத்துக்கு வீதியின் குன்றும் குழியுமானயிருந்த பகுதிகள் மூடப்பட்டு மண் போடப்பட்டு தார் ஊற்றும் பணிகள் இடம் பெறுகின்றன.

இதற்கு முன்னர் இந்த வீதியை திருத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்த போது செவிடன் காதில் ஊதிய சங்கின் கதையாக இருந்தது. ஆனால் தற்போது குறித்த வீதிகள் புனரமைப்புக் கண்டு மிளிர்கின்றன.

இதுபோல் ஏனைய இடங்களுக்கு ஜனாதிபதி வந்தால் திருத்தப்படாத வீதிகள் எல்லாம் திருத்தப்படுமா? என மக்கள் மத்தியில் கேள்வி எழுப்பப்படுகிறது. (வ-402)

# வவுனியாவுக்கு இன்று வருகிறார் ஜனாதிபதி

### கைத்தொழில்பேட்டையைத் திறந்து வைப்பார்




வவுனியா, ஓக.3

வவுனியா இராசேந்திரம் குளம் பகுதியில் அமைக்கப்பட்ட கைத்தொழில் பேட்டையை(ஆடைத் தொழிற்சாலை) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று திறந்து வைப்பதற்காக வவுனியாவுக்கு வருகை தரவுள்ளார்.

ஆசியாவிலே இரண்டாவது மிகப்பெரிய கைத் தொழில் பேட்டையாக இது அமையும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் ஐயாயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

ஜனாதிபதியின் வருகையையொட்டி நெளுக்குளம், புதையல்பட்டி, அரபாநகர், விநாயகபுரம், நேரியகுள வீதி உட்பட சுமார் 6 கிலோ மீற்றர் வரை அதிக எண்ணிக்கையில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் நேற்று முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீதிகளின் இரு மருங்கிலும் துப்புரவுப் பணிகள் நடைபெற்றன. கைத்தொழில் பேட்டை நிறுவனத்தைச் சூழவுள்ள பகுதிகளில் ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புக் படைப் பிரிவினர் சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி உலங்கு வானூர்தி மூலம் வவுனியாவில் தரையிறங்குவதற்கு வசதியாக 6 இடங்களைப் பாதுகாப்பு சோதனைக்குட்படுத்தி தயார் நிலையில்படையினர் பாதுகாப்புக்காக நிலை கொண்டுள்ளனர். (வ-402)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி இன்று

தென்மராட்சி, ஓக. 3

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கைதடி, மட்டுவில் ஆகிய பிரிவுகளில் இன்று வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி முதியோர் இல்லம், கைதடி மின்னொளி சன சமூக நிலையம் ஆகியவற்றில் வைத்தும் மட்டுவில் வடக்கு சந்திரபுரம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி ஆகிய இடங்களில் வைத்தும் தடுப்பூசி ஏற்றப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ப்புநாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுமெனவும் அந்த நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு கீரிமலைக்கு விசேட மினி பஸ் சேவை

வலி. வடக்கு, ஓக.3

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 6 ஆம்திகதி கீரிமலையில் நடைபெறவுள்ள சமய அனுட்டானங்களை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கீரிமலை வரை விசேட மினி பஸ் சேவைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மினி பஸ் சங்கங்களின் தலைவர் எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி, காங்கேசன்துறை வீதி - சுன்னாகம் அளவெட்டி வழியாகவும் மற்றும் அம்பனை வழியாகவும் இந்தச் சேவைகள் இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இதேவேளை இலங்கை போக்குவரத்து சபையினரின் விசேட பஸ் சேவைகளும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

## கடந்த வாரம் மட்டும் சந்தேகநபர்கள் 88 பேர் கைது

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 23 பேர் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 88 பேர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 13 பேரும், சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 12 பேரும், களவு எடுத்த குற்றச்சாட்டில் 4 பேரும், மோசடி செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், குடிபோதையில் பொது இடத்தில் கலகம்விளைவித்த குற்றச்சாட்டில் 12பேரும், திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 16 பேரும், கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 5 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்- என்றார். (வ-4)

## வவுனியா நகரில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 3

வவுனியா நகர பஸ் நிலையத்தை அண்மித்து 86 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டு எதிர் வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 25 ஆம் திகதி கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார், பெரியகமம், எழில்நகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

வவுனியா விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவற்றைக் கைப்பற்றினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## தகுந்த தற்காலிக அ.அட்டை தேர்தலில் பயன்படுத்தலாம்

யாழ்ப்பாணம்,ஓக.3

2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலின்போது தேர்தல்கள் திணைக்களத்தால் அல்லது ஆள்பதிவு திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை, 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலுக்கு ஏற்றவாறு கிராம சேவையாளரூடாக மாற்றியமைத்து வட மாகாண சபைத் தேர்தலில் பயன்படுத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி வட மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. தேர்தலின் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாயமானதாகும்.

இதற்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதிஅனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆள் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மதகுருமார்களுக்கான அடையாள அட்டை,

இவை தவிர 2011 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது தேர்தல்கள் திணைக் களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை, கிராம அலுவலர் ஊடாக 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு ஏற்றவாறு மீளவும் செல்லுபடியாக்கிப் பயன்படுத்த முடியும்.

2011 ஆம் ஆண்டுக்கு முன்னரான தேர்தல்களின் போது வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் செல்லுபடியாக மாட்டா.

மேலும் தெளிவில்லாத அடையாள அட்டைகள், செல்லுபடியற்ற அனுமதிப்பத்திரங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட அலுவலக அடையாள அட்டைகள், தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்ற போது வழங்கப்படும் பற்றுச்சீட்டு போன்ற ஒளிப்படத்துடன் கூடிய அல்லது ஒளிப்படம் இல்லாத வேறெந்த ஆவணமும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றார். (வ-5)

## அற்பத்தனமான சலுகைகளுக்கு விலை போகாது வாக்களியுங்கள்

### மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் முக்கியஸ்தர் வேண்டுகோள்



மன்னார், ஓக. 3

வடபகுதியைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மக்கள் அற்பத்தனமான சலுகைகளுக்கு விலைபோகாது சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவையின் இணைப்பாளரும், முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளருமான ஏ.சுனேஸ் சோசை-

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்;

போரின் போது இடம் பெயர்ந்த ஏராளமான தமிழ், முஸ்லிம் மக்கள் இன்னமும் தங்களது சொந்த வாழ்விடத்திற்குச் சென்று மீள் குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

மேலும், வடபகுதியில் மக்களின் காணி கொள்ளையிடப்படுகின்றது. இந்தக் காணிகளை இராணுவத்தினர் பறித்து வைத்துள்ளனர்.

மக்களின் வாக்குகளைப் பெற்று தற்போது அமைச்சர்களாக இருப்போருக்கு மக்களின் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முடியாதா? அல்லது அரசுக்கு நீங்களும் விலை போய் விட்டீர்களா?

அனைத்து இன மக்களும் தமது கலாசார மரபுகளைப் பேணுவதுடன், சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையும் உடையவர்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

அற்பத்தனமான சலுகைகளுக்காக எவரும் விலை போக வேண்டாம்.

தேர்தல் காலங்களில் அமைச்சர்களினாலும் அரசியல்வாதிகளினாலும் அள்ளி இறைக்கப்படுகின்ற பணம் அனைவரும் நிராகரிக்க வேண்டும். தமது வாக்கைச் சரியான வகையில் பயன்படுத்திப் பொருத்தமானவர்களைத் தேர்வு செய்ய வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

## இடம்பெயர் சேவை

> நாளை மறு தினம் திங்கட் கிழமை வரை பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நடை பெறவுள்ளது.

நெல்லியடி, ஓக. 3

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையின் இடம்பெயர் சேவை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை இந்த இடம்பெயர் சேவை நடைபெறவுள்ளது. இவ் வலயத்துக்கு உட்பட்ட அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் தமது குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் இச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-35)

## உக்ர ரத சாந்தி நூல் வெளியீடு - யாழ்ப்பாணம்



யாழ்./வண். வடகிழக்கு கொண்டலடி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு

**சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் - கௌரீஸ்வரி**

தம்பதிகள் உக்ர ரத சாந்தி சமஸ்கிரத நூல் வெளியீடு

**காலம்:-** 03.08.2013 சனிக்கிழமை பி.ப. 2 மணி
**இடம்:-** யாழ். கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்.
**தலைவர்:-** பேராசிரியர் இலக்கிய கலாநிதி பிரம்ம ஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர்.
வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்.
**மங்கள விளக்கேற்றல்:-**
**வேதபாராயணம்:-** தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள்
**திருமுறை பாராயணம்:-** து.கோபாலசிங்கம் மேற்படி ஆலய தர்மகர்த்தா
**ஆசியுரை:-** சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக்குருக்கள்
சர்வதேச இந்து மத குருபீட பீடாதிபதி, சுதுமலை
**வாழ்த்துரை:-** சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் (தர்மசாஸ்தா குருகுல அதிபர்)
**வரவேற்புரை:-** சிவஸ்ரீ இணுவில் பால ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்
**தலைமையுரை:-** தலைவர் அவர்கள்
**வெளியீட்டுரை:-** பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா
ஸ்ரீவித்யா கணனி அச்சகம், சர்வானந்த மய பீடம், இணுவில்.
**சிறப்புரை:-** சிவஸ்ரீ க.பிரணதார்த்திஹரக் குருக்கள்
சிவன் தேவஸ்தானம் (யாழ். பல்கலைக்கழகம்)
பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஸ்ணானந்த சர்மா
(பல்கலைக்கழக விரிவுரையாளர், நல்லூர் சிவன் தேவஸ்தானம்)

முதற்பிரதி:- சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
சிவன் தேவஸ்தானம் வல்வெட்டித்துறை.
கௌரவப் பிரதி:- பிரம்மஸ்ரீ ப.இராஜகோபால சர்மா நீராவியடி.
பிரம்மஸ்ரீ சு.நவநீத சர்மா நீராவியடி.
சிறப்பு பிரதி:-சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக் குருக்கள் யாழ்ப்பாணம்
சிவஸ்ரீ நா.நல்லூர் தாசக் குருக்கள் கொக்குவில்
சிவஸ்ரீ கு.வல்லவேஸ்வரக்குருக்கள் அராலி
ஏற்புரை:-சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள்
நன்றியுரை:- சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் அரியாலை

**இவ்விழாவில் அனைத்துக் குருமார்களையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு:- ***அனைவருக்கும் நூல் அன்பளிப்பாக வழங்கப்படும். குடும்பத்தினர்.***

## நூலாசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக. 3

வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சால் வருடாந்தம் நடத் தப்படும் திறந்த நூல் பரிசுத் தெரி வில்துறை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட நூல்களின் ஆசிரி யர்கள் தமிழிலக்கிய விழாவின் நிறைவு நாளில் கௌரவிக்கப் படவுள்ளனர்.

கௌரவிப்பு நிகழ்வு முல்லைத் தீவு வித்தியானந்தக் கல்லூரி யில் செப்ரெம்பர் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற வுள்ளது என்று அமைச்சு தெரி வித்துள்ளது.

கவிதைத் துறையில் வல்லை ''வெளி'' எனும் நூலின் ஆசிரி யரான அல்வாய் வடக்கைச் சேர்ந்த க.சின்னராஜன், நாடக த்துறையில் ''முதுசொம்'' என் னும் நாடகத்தின் ஆசிரியர் கொழும்புத்துறை 3 ஆம் குறுக் குத் தெருவைச் சேர்ந்த க.இ.கமல நாதன், ஆய்வும் விமர்சன மும் துறையில் சுன்னாகம் அ.குமார சாமிப் புலவர், 'வாழ்வும் பணி யும்' எனும் பெயரிலான நூலின் ஆசிரியர் திருநெல்வேலி கிழக்கு, பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜா, சிறுகதைத் துறையில் ''கண்ணீரினூடே தெரியும் வீதி'' எனும் நூலின் ஆசிரியர் யாழ்.3 ஆம் குறுக்குத் தெரு தேவராசா முகுந்தன், நாவல் துறையில் ''உப்புக்காற்று'' நூலின் ஆசிரி யர் யாழ்.மாட்டீன் வீதியைச் சேர்ந்த குருசுமுத்து இராஜப்பு, உயர் கல்வித் துறையில் ''பத் தாயிரம் ஆண்டு வங்கியியல் முகாமைத்துவம்'' எனும் நூலின் ஆசிரியர் பருத்தித்துறை அத்தி யடியைச் சேர்ந்த பேராசிரியர் மா.நடராஜசுந்தரம்.

சிறுவர் இலக்கியத் துறையில் ''சின்னஞ் சிறிய சிறகுகள்'' நூலின் ஆசிரியர் வவுனியா திருநாவற்குளம் கலாநிதி நா.தர் மராஜா, பல்துறை (வரலாறு) துறையில் ''வரணியின் மரபுரி மைகள் பாகம்-I'' நூலின் ஆசி ரியர்-மீசாலை கிழக்கு சி.கா. கமலநாதன், பல்துறை (பொது) ''ஈழத்துத் தமிழ்ப் பெண் ஆளு மைகள்'' நூலின் ஆசிரியர் கொழும்பு பூங்கா வீதி, திருமதி பி.சோமகாந்தன் ஆகியோரின் நூல்களே தெரிவு செய்யப்பட் டுள்ளன. விழாவில் தெரிவு செய் யப்பட்ட கலைஞர்களும் கௌர விக்கப்படவுள்ளனர்.

(வ-4)

## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

(இளைப்பாறிய பிரதம தபாலதிபர், அகில இலங்கை சமாதான நீதிவான், தலைவர் பண்டகைப் பிள்ளையார் ஆலய பரிபாலண சபை)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து (30.07. 2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இணுவில் கிழக்கு இளைப்பாறிய ஆசிரியர் சங்கரப் பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவாம்பிகை யின் அன்புக் கணவரும், தேவகுமாரி (ஆசிரியை, தொண்டமானாறு வீரகத்தி மகா வித்தியா லயம், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை), கேச குமாரி(அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறைத் திணைக்களம், வடக்கு மாகாண சபை), புவனகுமார் (அமெரிக்கா), புவனகுமாரி(ஆசிரியை, குருநாகல், பரகஸ் தெனிய, தேசிய பாடசாலை), தர்மகுமாரி(அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா நகரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. யோகேந்திரன் (வைத்திய பொறுப்பதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை நிலாவெளி), கேதீஸ்வரன்(ஆசிரியர், குருநாகல் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், ஹாஹினி, அகிலேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, செல்லமுத்து, பாலசிங்கம், குமாரசூரியர், பூரணம், ஆறுமுகம் மற்றும் திசைவீரசிங்கம்(ஜமேக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ரேணுமதி, கௌரிதேவி, தேவராஜன், ஜெகநாதன், குருலிங்கம் மற்றும் சிவாஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை அன் னாரின் இல்லத்தில் மு.ப.10.00மணியளவில் இடம்பெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவதேவி இல்லம்" உடுப்பிட்டி.

தகவல். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிர்காமு சின்னத்துரை (நாவற்குழி)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சிறிது காலம் கொழும்பில் வசித்தவருமான கதிர்காமு சின்னத்துரை கடந்த 31.07.2013 சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சிதம்பரி- சிதம்பரம், நாகமுத்து - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலட்சுமி, இராஜேஸ்வரி, ராணி ஆகியோரின் அன்புக் கணவரும் பாக்கியலட்சுமி, நகுலேஸ்வரன், யோகேஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன், சர்வேஸ்வரன், சாந்தரூபி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் திருச்செல்வம், லக்கின குமாரி, விஜயதர்சினி, சிந்துஷா (சுபா) ஆகியோரின் அன்பு மாமனும் துஷி, மதியழகன், கோபி, சுகிர்தன், வினிதன், அக்ஷனா, சுயணன், சயணன், அர்ணி, ஆதர்ணி ஆகியோரின் பேரனும் எர்ஷானின் அன்புப் பாட்டனும் காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி, முத்தையா மற்றும் தம்பிராசா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை இல.2, சிவன் வீதி இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777522458, 0778085154

(30179)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் தங்கம்மா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாக வும் கொண்ட சிவசுப்பிரமணியம் தங்கம்மா கடந்த 30.07.2013 செவ் வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி- பானுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை -சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, கனகரத்தினம், இராசரத்தினம், இராஜேஸ்வரி, செல்வரத்தினம், காலஞ்சென்ற மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் கயிலாயநாதன், துரைசிங்கநாதன், வள்ளிநாயகி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் திவ்வியரூபன், அற்புதரூபி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவகலா, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமியும் தக்ஷாயினி, பவிஷாயினி, கீர்த்தனன், திவ்வியன், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கார்த்திகேய வித்தியாசாலை வீதி,
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சிவசுப்பிரமணியம் (கணவர்)
திவ்வியரூபன் (மகன்) அற்புதரூபி (மகள்)

(சி/10700)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கோபாலகிருஸ்ணன் விக்னேஸ்வரன்**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03. 08.2013) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியள வில் கீரிமலையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீ கரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மாலுசந்தி, அல்வாய் தெற்கு,
அல்வாய்

குடும்பத்தினர்.

(37673)(10.16,14)

# தற்காலிக அ. அட்டைக்கு செப்.5 இற்குள் விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஓக. 3
எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் வாக்களிக்கும் நிலையங்களில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் தற்காலிக அடை யாள அட்டைக்கு செப்ரெம் பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பிரிவு கிராம அலு வலரின் பரிந்துரையுடன் தேர்தல் திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய அறிவித்துள்ளார்.

தேர்தலில் வாக்களிப்பதற் காக வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாய தேவையாக உள்ளது. இதன் அடிப்படையில் அடையாள அட்டை இல்லாதவர்கள் தத் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தற்காலிக அடை யாள அட்டைக்கு விண்ணப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளரை கோரியுள்ளார். தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதிய அனுமதிப்பத்திரம், ஓய்வூதியர் அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆள்பதிவுத் திணைக்களத் தால் வழங்கப்பட்ட மதகுரு மாருக்கான அடையாள அட்டை போன்றவற்றில் ஒன்றைக் காண்பித்தும் வாக்களிக்க லாம். 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை இந்த தேர்தலுக்குப் பயன்படுத்த முடியாது எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (வ-9)

## மீசாலை கிழக்கில் தொடர்ந்தும் வலுக்குறைந்த மின்சாரம்

தென்மராட்சி, ஓக.3
மீசாலை கிழக்கு சிற்றம்பலம் வீதியில் உள்ள குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் வலுக்குறைந்த நிலையில் காணப்படுவதால் மின்குமிழ்கள் பிரகாசமாக ஒளிர்வதில்லை என அந்தப் பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.
குறித்த வீதியில் 200 இற்கு மேற்பட்ட குடியிருப்புகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
ஏ-9 வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட முன்னர் மீசாலை புத்தூர் சந்தி மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் மூலம் மின்விநியோகம் இடம்பெற்று வந்தது.
வீதி அகலிப்புக் காரணமாக இந்தப் பகுதிக்கான மின்விநியோகம் புத்தூர் சந்தியிலிருந்து அல்லாரை மின்மாற்றி விநியோகப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் விநியோகத்தின் வலு அளவு பெருமளவு குறைந்துள்ளதாகவும் இதனால் மின் மோட்டர்கள் உட்பட பல மின் உபகரணங்களைப் பயன் படுத்த முடியாத நிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)




# இந்தோனேஷிய படகு விபத்தில் இறந்தோர் தீவகத்தில் ஒதுக்கம்

யாழ்ப்பாணம், ஓக.3
தீவக கடற்கரைப் பகுதியில் தொடர்ச்சியாக கரையொதுங்கும் சடலங்கள் அண்மையில் இடம்பெற்ற இந்தோனேஷிய படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களாக இருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
இதுவரையில் மூன்று ஆண்களினதும் ஒரு பெண்ணினதும் ஒரு சிறுமியினுடைய சடலம் கரையொதுங்கியுள்ளன. இவை யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷியாவிலிருந்து ஆஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு கடந்த மாதம் 23 ஆம் திகதி விபத்துக்குள்ளானது.
இந்தப் படகில் பயணம் செய்த 200 பேர் தொடர்பான நிலை குறித்துத் தெரியவந்துள்ளபோதிலும் எஞ்சிய 8 பேர் தொடர்பில் கண்டறியப்பட வில்லை.
இந்த நிலையில் தீவகக் கடற்பகுதிகளில் கடந்த வாரத்திலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலங்கள் கரையொதுங்குகின்றன.
இதுவரையில் மூன்று ஆண்களினதும் ஒரு இளம் பெண்ணினதும் சிறுமியொருவருடையதுமான சடலம் மீட்கப்பட்டுள்ளன.
இவை யாவும் ஒரே காலப்பகுதியில் இறந்தவர்கள் என்று வைத்தியசாலைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மேலும்பெண்ணினதும்சிறுமியினதும் உடலில் மேற்சட்டை காணப்படுவதுடன் பெண்ணின் கையில் இந்து ஆலயங்களில் கட்டப்படும் நூல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## ஒளி கிடைக்க காத்திருக்கும் கொடிகாமம் சந்தி

தென்மராட்சி, ஓக. 3
கொடிகாமம் நகரப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கு பிரதேச சபையினர் செவிசாய்க்காமல் அசண்டையீனமாக இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஏ-9 வீதியில் வாகனங்களில் வரும் மக்களின் நலன்கருதி கொடிகாமம் சந்தி மற்றும் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் சக்தி வாய்ந்த மின் விளக்குகளைப் பொருத்துமாறு கடந்த ஆறு மாதங்களாக பலதடவைகள் நேரிலும் கடிதங்கள் மூலமும் பிரதேச



சபைக்கு கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
ஏற்கனவே இந்த இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சிறிய மின்விளக்குகள் பழுதடைந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியுள்ளன.
அவற்றுக்கு புதிய விளக்குகள் அமைக்கும் போது சக்தி கூடிய மின்விளக்குகளைப் பொருத்துமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
கொடிகாமம் சந்தி வடமராட்சி மற்றும் கச்சாய், வரணி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் மக்களுக்கு கொடிகாமம் நகரவீதி முக்கிய இடமாக உள்ளதாகவும் சந்தியில் மின்வெளிச்சம் இல்லாததால் இரவு வேளையில் வாகனங்களில் வருவோர் இருளில் இடம் தெரியாமல் மீசாலை வரை செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## உரிமை கோராத சடலம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பெயர், முகவரி, தெரியாத உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கடந்த 31 ஆம் திகதி மாலை 4.05 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸ் மூலம்கொண்டுவரப்பட்டு,வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலத்தை உறவினர் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

## மருத்துவ பராமரிப்பு நிலையம் குரும்பசிட்டியில் புதிதாகத் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
குரும்பசிட்டியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் நேற்று முன்தினம் வியா ழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையத்தில் புன்னாலைக்கட்டுவன் பிரிவு வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு தினமும் பி.ப. 2 மணி முதல் பி.ப. 4 மணி வரை கடமையாற்றுவார்.
குரும்பசிட்டியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் வழங்கிய காணியில் குறித்த வைத்தியசாலை அமைக்கப்பட்டது.
குரும்பசிட்டியில் அமைந்திருந்த மத்திய மருந்தகம் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 30 ஆண்டுகளாகச் செயலிழந்து சேதமடைந்துள்ளது.
இந்த நிலையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இந்த நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## தெங்கு, பனம் பொருள் உற்பத்தியை அதிகரிக்க விரைவில் நடவடிக்கை

நெல்லியடி, ஓக 3
மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்னைமற்றும்பனம்பொருள் சார்ந்த உற்பத்தித் துறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரை வில் முன்னெடுக்கப்படவுள்ளன.
தென்னை மற்றும் பனம் பொருள் உற்பத்திகளை நம்பி வாழும் குடும் பங்கள் பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொகுதி ரீதியாக அதற்கான மேம்படுத்தல் செயற்றிட்டங்களை முன் னெடுக்க பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில், முயற்சி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுக்க வுள்ளது.
பட்டிருப்பு, நாவற்குடா, வாழைச்சேனை, ஏறாவூர், அட்டாளைச் சேனை, மட்டக்க ளப்பு ஆகிய ஆறு பிரிவுகளின் சங்கங்கள் ஊடாக இதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
பனை தென்னை உற்பத்தி துறை களை மேற்கொள்ளும் குடும்பங் கள் தமது உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளையும் அதனூடாக எவ்வாறு வருமானத்தைப் பெறுதல் தொடர்பான ஆலோசனைகளும் சங் கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன. (வ-14)

## செஞ்சிலுவைச் சங்கம் அமைத்த கிணறு மக்களிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 3
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெல்லிப்பழை பிரதேசத்தின் மாவிட்டபுரம் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களின் தேவை கருதி அமைத்துள்ள குழாய்க் கிணறும் நான்கு பம்புகளும் மக்கள் பயன்பாட்டுக்கென வழங்கப்பட்டுள்ளன.
கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன், உபதலைவர் த.ரவிச்சந்திரன், தெல்லிப்பழைப் பிரிவுத் தலைவர் எஸ். செல்வரட்ணம், செயலாளர் எஸ்.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அந்தப் பகுதி மக்களுக்கு இருபது லீற்றர் கொள் எவுள்ளன நூறு தண்ணீர் பரல்களையும் வழங்கியுள்ளது. (வ-7)

## ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.3
ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக் கான 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
ஒரேசேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் கடமையாற்றி வரும் சகல ஆயுள் வேத மருத்துவ உத்தியோகத்தர்களும் கட்டாயமாக இந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்தியர் திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார். (வ-14-11)

## அடுத்த பிரதமர் மோடியே

### யஷ்வந்த் சின்ஹா நம்பிக்கை

ராம்கார், ஓக. 3
இந்தியாவின் அடுத்த பிரதமராக குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தேர்வு செய்யப்படுவார் என்று பா.ஜ. மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பா.ஜவின் தேர்தல் பிரசார குழுத் தலைவராக, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி அண்மையில் நியமிக்கப்பட்டார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் பா.ஜவின் பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பா.ஜவின் மூத்த தலைவர்யஷ்வந்த்சின்ஹா, ''நாட்டின் அடுத்த பிரதமராக, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தேர்வு செய்யப்படுவார். அதில் எனக்கு முழு நம்பிக்கையுள்ளது. மோடிக்கு எனது ஆதரவு எப்போதும் உண்டு'' என்று தெரிவித்துள்ளார்.(ற)



பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத இந்திய அரசைக் கண்டித்தும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று முன்தினம் திருச்சி வந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் நடைபெற்றது. அதையடுத்து வைகோ மற்றும் ஆதரவாளர்கள் 500 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ற)

## உருவாக்கப்படும் மாநிலங்களால் நாடு பலவீனமுறும்

### ஹசாரே கருத்து

லக்னோ, ஓக.3
புதிய மாநிலங்கள் உருவாக்கப்படுவது நாட்டைப் பலவீனப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே.

இதுகுறித்துஅவர்கூறும்போது, ''பெரிய மாநிலங்கள் உடைக்கப்பட்டு, புதிய மாநிலங்கள் உருவாக்கப்படுவதால், நாடு பலவீனம் அடையும். ஆந்திராவை பிரித்து, தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கும் மத்திய அரசின் முடிவு தவறானது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை, தனி மாநிலம் மற்றும் மாவட்டங்கள் கோரும் பலரையும் ஊக்கப்படுத்தும். அது நாட்டை பலவீனமாக்கும் செயல்.

எங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், தேர்தலில் போட்டியிட மாட்டார்கள். நாட்டு மக்களின்சேவையில்தொடர்ந்து ஈடுபடுவர்'' என்று தெரிவித்தார். (ற)

# தமிழக கடலில் சீனர்கள்

## தகவல் தரக் கோருகின்றது இந்தியக் கடற்படை

சென்னை, ஓக.3
தமிழக கடற்பகுதியில் சீனர்கள் இனங்காணப்பட்டால் உடனடியாகத் தமக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று தமிழக மீனவர்களை அறிவுறுத்தியுள்ளது இந்திய கடலோரக் காவற்படை. தமிழகக் கடற்பரப்பில் இலங்கை கடற்படையின் கப்பல்களில் சீன வீரர்கள் காணப்பட்டனர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் முறையிட்டதை அடுத்தே இந்தியக் கடற்படை இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.



இந்திய எல்லைப் பகுதியில் சீனாவின் ஊடுருவல் தற்போது அதிகரித்துள்ள நிலையில் இந்திய கடலோரக் காவற்படை, மீனவர்களின் முறைப்பாடு குறித்து அதிக கவனம் எடுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இந்திய கடலோரக் காவற்படை, ''தமிழக கடற்பரப்பில் சீனர்களின் நடமாட்டம் காணப்படுகின்றது என்று தமிழக மீனவர்கள் முறையிட்டுள்ளனர். அவ்வாறான நடமாட்டம் இனங்காணப்பட்டால் உடடியாக எமக்குத் தகவல் தர அறிவுறுத்தியுள்ளோம். அவ்வாறு தகவல் தருவோரின் விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும். முன்னரை விட தமிழக கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் குறித்து அதிக அக்கறை கொண்டுள்ளோம்'' என்று தெரிவித்துள்ளது.(ற)

## நட்புறவுக்கே முதலிடம்

### இந்திய வெளியுறவுத்துறை செயலர் கருத்து

புதுடில்லி, ஓக.3
அயல் நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்துவதையே எனது முதலாவது பணியாகக் கொண்டுள்ளேன் என்று புதிதாகப் பதவியேற்றுள்ள இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் சுஜாதா சிங் தெரிவித்துள்ளார்.

''பாகிஸ்தானுடன் ஆக்கபூர்வமான நல்லுறவை வளர்ப்பதே இந்தியாவின் கொள்கையாக இருந்து வருகிறது. அதற்கு வன்முறை, பயங்கரவாதம் ஆகியவை இல்லாதசூழல் அமைய வேண்டியது கட்டாயமாகிறது.

அயல் நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுத்து செயல்படவிருக்கிறேன். உலக நாடுகளுடன் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த உறவை வலுப்படுத்துவதே அடுத்த பிரதான நோக்கமாகும்'' என்று தெரிவித்துள்ளார் சுஜாதா சிங். (ற)

## அமராவதியில் வெள்ளப் பெருக்கு


அமராவதி, ஓக.3
அமராவதி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கை அடுத்து பொதுமக்களைப் பாதுகாப்பான இடத்துக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூணாறில் தொடரும் கனமழையால்அமராவதி அணையின் நீர்மட்டம் 83 அடியை எட்டியுள்ளது. (ற)

# பிற மாநிலங்களுக்கு தமிழகம் முன்னோடி

## இந்தியப் பிரதமர் புகழாரம்



சென்னை, ஓக.3
தமிழகம் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங். புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழிற்சாலைத் திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் கூறியதாவது:
''தமிழகம் நம் நாட்டில் முன்னேறிய மாநிலம். பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கிறது. 13ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் நாட்டில் 20 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு சூரிய மின்சக்தி தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்தத் தொழிற்சாலை உதவி புரியும். நமது நாட்டின் எதிர்கால மின் தேவையை சமாளிக்க வசதியாக இருக்கும் என்று நம்புகிறேன்'' என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் பிரபுல் படேல், பிரதமர் அலுவலக அமைச்சர் நாராயண சாமி, தமிழக ஆளுநர் ரோசய்யா, தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

# இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களை நிறுத்துக

## அ.தி.மு.க., தி.மு.க. கூட்டாகக் கோரிக்கை

சென்னை, ஓக. 3
தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், இலங்கை அரசை இந்திய மத்திய அரசு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.



புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே மத்திய அரசை இவ்வாறு வலியுறுத்தியுள்ளன என அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.

தி.மு.க. சார்பில் கருத்துத் தெரிவித்த டி.ஆர்.பாலு, ''இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளக் கூடாது. தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இந்தவிடயத்தில் இந்திய மத்திய அரசு உடனடியாக தலையிட்டு இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

அ.தி.மு.க. சார்பில் கருத்துத் தெரிவித்த தம்பித்துரை, ''தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது தொடர் கதையாக உள்ளது. மத்திய அரசு தனது அலட்சியப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். இலங்கை அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று தெரிவித்தார். (ற)

## தோல்வியை தழுவும் இன்சாட் 3 டி

புதுடில்லி, ஓக.3
நிலம் மற்றும் கடற்பரப்புகளில் வானிலையை ஆய்வு செய்யும் இன்சாட் 3டி செயற்கைக்கோள் பிரெஞ்சு கயானாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது. பிராசின் ஏரியான் 5 என்ற ரொக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்த செயற்கைக்கோள் 2060 கிலோ எடை கொண்டது.

பேரிடர் காலங்களில் மீட்புப் பணியில் ஈடுபடுவதற்கும் இந்த செயற்கைக்கோள் மிகவும் உதவிகரமாக இருக்கும் என கூறப்பட்ட நிலையில் தற்போது செயற்கைகோளுடனான தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டு எந்த வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை என இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ற)

## போர்க்குற்றம்: லிபிய முன்னாள் அமைச்சருக்கு தூக்குத் தண்டனை

**மிஸ்ரடா, ஓக.3**

**போர்க்குற்றங்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து லிபியாவின் முன்னாள் அமைச்சர் ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது அந்த நாட்டு நீதிமன்றம்.**

லிபிய முன்னாள் ஜனாதிபதி மும்மர் அல் கடாபியின் நெருங்கிய உறவினரும், கடாபியின் அமைச்சரவையில் கல்வித்துறை அமைச்சருமான அகமது இப்ராஹிம் என்ற குறித்த அமைச்சர் 2011 ஆம் ஆண்டு லிபியாவில் இடம்பெற்ற போரில் பல்வேறு வகைகளில் வன்முறைகளைத் தூண்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதுடன், போர்க் காலப்பகுதியில் பலர் தனிப்பட்ட முறையில் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது அந்நாட்டு நீதிமன்றம். (ற)



சீனாவில் தற்போது கடும் வெப்பம் நிலவி வருகின்றது. அதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிக வெப்பம் காரணமாக 10க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். பொதுமக்கள் கடற்கரைகளையும், நீர் நிலைகளையும் நோக்கிப் படையெடுத்து வரும் நிலையில், ஜினான் மாகாணத்தில் கடும் வெயில் காரணமாக சூடாகியுள்ள வீதியில் முட்டை ஒன்றைப் பொரிக்கும் முயற்சியில் ஒரு சிறுவன். (ற)

## ஆளில்லா விமானங்களின் தாக்குதல்கள் தொடரும்

### அமெ. திட்டவட்டம்

**இஸ்லமாபாத், ஓக.3**

**பாகிஸ்தான் – ஆப்கன் எல்லைப் பகுதியில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்தும் தாக்குதல்களை நிறுத்த முடியாது என்று அமெரிக்க திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது.**

பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜோன் கெர்ரி இதுகுறித்து பாகிஸ்தான் அரசுக்கு திட்டவட்டமாக எடுத்துக் கூறியுள்ளார் என்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிப்பதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் அவசியமானவை என்றும் அமெரிக்கா கூறியுள்ளது. இது விடயமாக இரு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

## ஈரான் மீது அமெ. தொடர்ந்து அழுத்தம்

வொஷிங்டன், ஓக.3

ஈரான் மீதான தடைகளை மேலும் அதிகரித்துள்ளது அமெரிக்கா.

ஈரானின் அணு செறிவூட்டல் தொடர்பாக நிலவி வரும் கருத்து முரண்பாடுகளை அடுத்தே புதிய தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. ஏற்கனவே ஈரான் மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அமெரிக்கா, தற்போது ஈரான் கச்சா எண்ணெய் இறக்குமதியை உலக அளவில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தற்போது அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்தத் தடையால் ஈரான் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். (ற)

# வெற்றி பெறுவோம்

## சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத் உறுதி

அலப்போ, ஓக.3

உள்நாட்டுப் போரில் கிளர்ச்சியாளர்களை அடக்கி இராணுவம் வெற்றி பெறுவது உறுதி என்று தெரிவித்துள்ளார் சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத்.



சிரியாவில் நடைபெற்ற இராணுவ தின நிகழ்வுகளுக்காக தொலைக்காட்சியில் நாட்டுக் மக்களுக்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''இராணுவ வீரர்கள் மீதும் அவர்களின் செயற்பாடுகள் மீதும் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. தேசத்தைக் காக்கும் கடமையை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகின்றேன். எமது நாட்டு இராணுவம் கிளர்ச்சியாளர்களை அடக்கி வெற்றி பெறும் என்பதில் நான் உறுதியாக இருகின்றேன்'' என்று அசாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத் இராணுவ தினத்தை முன்னிட்டு போர் நடைபெற்றுவரும் முன்னரங்க நிலைகளுக்குச் சென்று இராணுவத்தினருடன் கலந்துரையாடியுள்ளார் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக தலைநகர் டமாஸ்கஸின் கிழக்குப் பகுதியிலும் மற்றொரு முக்கிய நகரான அலப்போ நகரின் மேற்குப் பகுதியிலும் சிரிய இராணுவம் கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. கடந்த மாதம் கிளர்ச்சியாளர்களின்வசமிருந்தஹோம்ஸ் நகரை சிரிய இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். (ற)

## மேலாடை இன்றிப் போராட்டம் விழிபிதுங்கிய ரஷ்ய அதிகாரிகள்

**ஸ்டொக்கோம், ஓக.3**

**ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து இரு பெண்கள் மேலாடை இன்றி நடத்திய போராட்டத்தால் திக்குமுக்காடிப் போயுள்ளனர் சுவீடனில் உள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகள்.**

ரஷ்யாவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் பேரணிகள் நடத்தினாலோ அல்லது இளம் பிராயத்தினருக்கு ஓரினச் சேர்க்கையாளர்கள் குறித்த விவரங்களைத் தெரிவித்தாலோ தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த இரு பெண்களும் மேலாடை இன்றிப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தூதரகத்துக்குள் திடீரென மேலாடை இன்றி நுழைந்த பெண்களைப் பார்த்து அங்கிருந்த அதிகாரிகள் திக்குமுக்காடிப் போயுள்ளனர். உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் விரைந்து வந்த பொலிஸார் இரு பெண்களையும் கைது செய்து அழைத்துப் போயுள்ளனர். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகள் ''இவ்வாறான ஒரு போராட்டத்தை நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சற்று நேரம் அனைவருக்கும் என்ன செய்வது என்றே தோன்றவில்லை'' என்று தெரிவித்துள்ளனர். (ற)



# ஸ்நோடனுக்கு ரஷ்யா தற்காலிக அடைக்கலம்



மொஸ்கோ, ஓக.3

அமெரிக்க தேசிய உளவு அமைப்பின் இரகசிய உளவுத் திட்டங்கள் தொடர்பாக விவரங்களை பகிரங்கப் படுத்திய எட்வேர்ட் ஸ்நோடனுக்கு ரஷ்யா தற்காலிக அடைக்கலம் வழங்கியுள்ளது. அதையடுத்து அவர் இன்னும் ஒரு வருட காலத்துக்கு ரஷ்யாவில் தங்கியிருக்க முடியும்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மொஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருந்த ஸ்நோடன் தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ள ஸ்நோடனின் சட்டத்தரணி அனடோலி குச்சேரினா, ஆவணங்கள் ஸ்நோடனுக்குக் கிடைத்ததை அடுத்து அவர் விமானநிலையத்தில்இருந்து வெளியேறி பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஸ்நோடனை ஒப்படைக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில், ரஷ்யா ஸ்நோடனுக்கு தற்காலிக அடைக்கலம் வழங்கியுள்ளது.

இதேவேளை, இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்நோடனின் தந்தை லோன் ஸ்நோடன், ''ரஷ்யா செல்லுமாறு முன்னர் அமெரிக்க உளவு அமைப்பு வற்புறுத்தியது. எனினும் அப்போது ஸ்நோடனுக்குப் பிரச்சினை ஏற்படும் என்பதால் மறுத்து விட்டேன். எனினும் தற்போதுள்ள சூழலில் நான் ரஷ்யா செல்ல முடியும். விரைவில் ரஷ்யா பயணமாகவுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

அமெரிக்க உளவுத் திட்டம் தொடர்பான புதிய தகவல் ஒன்று பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. எட்வேர்ட் ஸ்நோடனே புதிய திட்டம் குறித்த் ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

எக்ஸ் கீ ஸ்கோர் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டம் மூலம், இணையத்தைப் பயன்படுத்தும் ஒருவரின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பான அமெரிக்காவின் ரகசிய ஆவணங்கள் சிலவற்றை 'கார்டியன்' இதழ் வெளியிட்டுள்ளது. இந்த வசதியை அமெரிக்காவின் என்.எஸ்.ஏ. எனப்படும் தேசியப் பாதுகாப்பு அமைப்பு மட்டுமல்லாமல், அதனுடன் தொடர்புடைய பிற அமைப்புகளும் பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது. (ற)

## 100 செய்தித் தளங்களை திடீரென முடக்கியது சீனா

பிஜிங், ஓக. 3

அரசுக்கெதிரான கருத்துக்கள் பரவுவதைத் தடுக்கும் விதமாக 100 செய்தி இணையத்தளங்களை சீன அரசு திடீரென முடக்கியுள்ளது.

குறித்த இணையத்தளங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்து வருவதை அடுத்தே சீன அரசு இந்த அவசர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீன அரசின் தேசிய இணையத்தள கட்டுப்பாட்டு மையம், ''குறித்த இணையத் தளங்கள் எம்மிடம் முறையான அனுமதியைப் பெறவில்லை. இனந்தெரியாத நபர்கள் திட்டமிட்டு அரசு தொடர்பான பிழையான தகவ்ல்களை வெளியிட்டு வருகின்றனர். அதையடுத்தே அவை தடைசெய்யப்பட்டுள்ளன'' என்று தெரிவித்துள்ளது.

சீன அரசின் இந்த நடவடிக்கை மக்களிடையே பெரும் எதிர்மறைக் கருத்துகளை உருவாக்கியுள்ளது. கருத்துச் சுதந்திரத்தை சீன அரசு திட்டமிட்டு நசுக்கி வருகின்றது என்று பெரும்பாலனவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

## மாணவன் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

தென்மராட்சி, ஓக. 3
தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று வீடு திரும்பிய மாணவனை வழிமறித்த கும்பல் மோசமாகத் தாக்கியுள்ளது.
இந்தச் சம்பவம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீசாலை கேணியடிச் சந்தியில் இடம்பெற்றது.
மீசாலை மேற்கைச் சேர்ந்த குமாரலிங்கம் வனோஜன் (வயது-16) என்னும் மாணவனே தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவராவர். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ந-9)

## திறந்து வைப்பு

நெடுந்தீவு மத்தி புனிதயுவானியார் தேவாலயத் தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அடிகளார் குருமார் பணிமனையை திறந்து வைப்பார்.
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புதிதாகப் புனரமைக்கப்பட்ட நெடுந் தீவு கிழக்கு புனித அந் தோனியார் தேவாலயத்தையும் திறந்து வைத்து திருப்பலி பூசையை ஒப்புவிப்பார். (ந-7)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்தி லுள்ள 12 ஞானக்குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 47 ஆவது விளை யாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி ஆர்.வசந்த சேனனும், சிறப்பு விருந்தினர்களாக இ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் இ. எஸ்.பி நாகரத்தினமும், கௌரவ விருந்தினராக கிளி நொச்சி வலய ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசாவும் கலந்து கொள்வர். (ந-10)

**லொறி விற்பனை**
LJ-XXXX தொடர் இலக்கம் உடைய
Lanka Ashok Leyland, (Ecomet)
Full Body லொறி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 600 7775
(30149)(3.6.11)


யாழ். மாவட்ட
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**
**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**
மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 2013.08.08 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று முற்பகல் 11 மணியளவில் சங்கத்தின் தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் எமது சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் தற்போதைய அங்கத்தவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
விடயங்கள்:
01. 2012 ஆம் நிதியாண்டுக்கான கணக்கறிக்கையினை சமர்ப்பித்தல்
02. சங்கத்தின் தற்போதைய நிலையினை ஆராய்தல்
03. அங்கத்தவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளினை ஆராய்தல்
04. வேறு விடயங்கள்
குறிப்பு: சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
நெறியாளர் குழு கட்டளைப்படி, செயலாளர் கா.பாஸ்கரன்.
(c/10743)(3.6.11)

**வேலையாள் தேவை**
கிறைண்டிங் மில் வேலையில்
அனுபவமுள்ள வேலையாள் தேவை.
தொடர்பு: 077 424 6864 (30148)(3.6.11)

**கடை வாடகைக்கு**
சாவகச்சேரி யூனியனுக்கு முன்பாக உள்ள
கடை வாடகைக்கு உண்டு.
(29610)(45.6.3) தொடர்பு: 077 654 9641

**காணி விற்பனைக்கு**
தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப் பட்ட சுற்று மதிலுடன் யாழ்.காரைநகர் வீதி, சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (38236)(3.5.6)
தொடர்பு:075 731 6139

**காணி விற்பனைக்கு**
கட்டுவன் மேற்கு, வைரவர் கோயிலடியில் கிணற்றுடன் கூடிய 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இருந்து 750m)
தொடர்பு: 021 321 6132, 077 844 5551
(30145)(3.6.11)

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் நாவன்மைப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஓக. 3
கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்திய கோட்ட மட்டத் திலான நாவன்மைப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.
பிரிவு ''இ''
முதலாம் இடம்: ந.அபிராமி- திருவையாறு ம.வி, இரண் டாம் இடம்: அ.யனகா- சிவ நகர் அ.த.க.பள்ளி
பிரிவு ''ஈ''
முதலாம் இடம்: பி.தமிழ் விழி- சிவநகர் அ.த.க.பள்ளி,
இரண்டாம் இடம்: க.லதாங்கி- சிவநகர் அ.த.க.பள்ளி, மூன் றாம் இடம்: பா.நேருயா- சிவநகர் அ.த.க.பள்ளி, கு.டிலக்சனா-உருத்திரபுரம் ம.வி
பிரிவு ''உ''
முதலாம் இடம்: சி.துளசிகா- திருவையாறு ம.வி, இரண் டாம் இடம்: கு.ஜெயகிருச்ணவி- வட்டக்கச்சி ம.வி, மூன்றாம் இடம்: க.விதுசாளினி
பிரிவு ''ஊ''
முதலாம் இடம்:ச.பாமகள்- இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, இரண்டாம் இடம்:சி.பிரியந்தன்- திருவையாறு உ.நி.ப,
மூன்றாம் இடம்: யெ.யதுர்சிகா
பளைக் கோட்டம்
பிரிவு ''இ''
முதலாம் இடம்: வ.அபிலாசா- பளை மத்திய கல்லூரி, இரண்டாம் இடம்: ம.ரம்சிகா-பளை மத்திய கல்லூரி, மூன்றாம் இடம்: ஜி.லஜீக்கா-பளை மத்திய கல்லூரி
பிரிவு ''ஈ''
முதலாம் இடம்: செ.கின்சிகா- பளை மத்திய கல்லூரி, இரண்டாம் இடம்: அ.பவித்திரா- பளை மத்திய கல்லூரி, மூன்றாம் இடம்: வ.சிவசுதன்- பளை மத்திய கல்லூரி
பிரிவு ''உ''-முதலாம் இடம்: கெ.நிருசன் பிரட்றிக்-பளை இந்து தொடக்கப் பள்ளி, இரண்டாம் இடம்: கே.கிரேசன்-பளை இந்து தொடக்கப் பள்ளி, கெ.கனிஸ்ரலா-பளை இந்து தொடக்கப் பள்ளி-
பிரிவு ''ஊ''
முதலாம் இடம்: சி.ரம்சி-பளை இந்து தொடக்கப் பள்ளி, இரண்டாம் இடம்: ப.மதுசா-பளை இந்து தொடக்கப் பள்ளி, மூன்றாம் இடம்: நி.நிலாயன்-பளை இந்து தொடக்கப் பள்ளி, இ.விதுசா- பளை இந்து தொடக்கப் பள்ளி
கண்டாவளைக் கோட்டம்-
பிரிவு ''இ''
முதலாம் இடம்: க.அபிசிகா- கிளி முருகா னந்தாக் கல்லூரி,இரண்டாம்இடம்:ச.சுயீகா-பரந்தன் இந்து உ.நி.ப, மூன்றாம் இடம்: க.அன்சியா யொய்சி- கிளி முருகானந்தாக் கல்லூரி
பிரிவு ''ஈ''-
முதலாம் இடம்: ச.சதுர்சிகன்- முருகானந் தாக் கல்லூரி, இரண்டாம் இடம்: பா.சதுர் சுதிகா-பரந்தன் இந்து உ.நி.ப, ரா.சானுயா- முருகானந்தாக் கல்லூரி
பிரிவு ''உ''-முதலாம் இடம்: அ.யதுசா- கிளி முருகானந்தா தொடக்கப் பள்ளி, இரண் டாம் இடம்: பா.சாரங்கன்-பரந்தன் இந்து உ.நி.ப, மூன் றாம் இடம்: இதனஞ்சயன்- பரந்தன் இந்து உ.நி.ப
பிரிவு ''ஊ''
முதலாம் இடம்: ச.தனுசியா- கிளி பிரமந்தன்அறு உ.நி.ப, இரண்டாம் இடம்: யெ.அனுசன்- பரந் தன் இந்து உ.நி.ப, மூன்றாம் இடம்:க.சவே யினி - பரந்தன் இந்து உ. நி.ப. (க-12)

**மரதன் ஓட்டப்போட்டி**
கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 39 ஆவது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு வெளிக்கழகங்களுக்கான மரதன் ஓட்டம் (ஆண்கள்). இதில் பங்குபற்றவிரும்பும் வீரர்கள் 05.08.2013 இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 082 5513, 077 112 7755
கூவில் தீபஜோதி சனசமூக நிலையம்,
புலோலி மேற்கு, புலோலி.
(37670) (46.6.3)

**Learn Computer Hardware Technology**
மிகத்தரமான கல்விநெறிகளை தொழில் வழங்கக்கூடிய வகையில் வடிவமைத்து அதற்கான பட்டதாரி நிபுணர்களால் மட்டுமே கற்பிக்கும் கே.யு எடியுகேசன் நிறுவனத்தின் இன்னொரு உடனடி வேலை வாய்ப்பிற்கான பயிற்சி நெறி.
1 மாத செயல்முறைக்கல்வி,அதன் பின் இரண்டுமாத தொழில்பயிற்சி. நூற்றுக்கணக்கான கணினி மற்றும் உதிரிப்பாகங்களை திருத்திப்பழகி வெளியேறுங்கள். உங்கள் வேலை வாய்ப்பிற்கு நாங்கள் உத்தரவாதம்.
**கணினி பழுது பார்த்தல் பயிற்சி நெறி**
KU Education.
Creating Employable Graduates
இலவச பயிற்சி நெறிக்கையேட்டிற்கும் விபரங்களுக்கும் நேரில் வரவும்.
0777-302882 | www.kugroup.info (C/10740)
இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**
**VACANCIES**
Applications are hereby invited from qualified persons for the following vacancies:
1. **Teachers**
   - Tamil 6-A/L
   - Sinhala Language
   - Subjects in Primary School-English Meadium
2. **Administrative officer** with a good command of English, Computer Literacy and experience

Please send your CV including the contact details of two non-related referees by post or via e-mail on or before **15th August 2013**. Only shortlisted candidates will be called for an interview.
**The Principal**
**St.John's college, Jaffna.**
**stjohns@sltnet.lk**
(c/10723)(3.6.11)

**லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்**
- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 1831, 021 492 1832

**சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்**
**(Employment Pass)**
* இரண்டு வருட வேலை
* மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
* மாபிள் தொழிற்சாலை.
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0214 921831, 0214 921832
(சி/10447)

# இணைப்பாட விதான செயற்பாட்டிலும் வடமராட்சி முன்னேற்றம்

## விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலர் கருத்து

நெல்லியடி, ஓக. 3
வடமராட்சிக் கல்வி வலயம் கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டு வருகிறது. இதனை மேலும் முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளை கல்விச் சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்று வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்திய சீலன் தெரிவித்தார்.

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் அண்மையில் நடத்திய ஆடித் திங்கள் நிறைமதி கலைவிழா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'' வலயக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் நிறைமதி கலை விழாவைக் கொண்டாடுவதன் நோக்கம் இயல், இசை, நாடகம் என்பன வளர்ச்சியடைய வேண்டும் என்பதே.

அத்துடன் எமது பாரம்பரிய கலைகளை அழிய விடாது பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டும் என்பதே இதன் குறிக்கோளாகும்.

நாட்டியம், குழுப்பாடல், தனிப்பாடல், கூத்து, நாட்டுக் கூத்து என்பவை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் வடமராட்சி கல்வி வலயம் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டு வருகிறது.

இதனை மேலும் ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்கள் மத்தியில் இவை குறித்து ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (வ-14- 35)

# 6 மாதங்களில் மட்டும் 50 சங்கங்கள் மறுசீரமைப்பு

## மூடப்பட்டிருந்த சிக்கன கடன் வழங்கு கூ. சங்கங்களுக்கு விடிவு

யாழ்ப்பாணம், ஓக.3
யாழ்.குடாநாட்டில் இவ்வாண்டில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் ஐம்பது வரையிலான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மீள புனரமைக்கப்பட்டுள்ளதாக சிக்கன கடன் வழங்கும் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டத்தின் பல பிரதேசங்களில் செயற்படாமல் மூடப்பட்ட நிலையில் இருந்த அநேகமான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளவும் புனரமைத்து அவற்றில் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கையில் சிக்கன கடன் வழங்கும் சமாசம் ஈடுபட்டு வருகின்றது.

> புனரமைக்கப்பட்ட சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்குரிய சுய தொழிலுக்கான கடன் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது இதுவரைக்கும் ஐம்பது வரையிலான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்குரிய சுய தொழிலுக்கான கடன் வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் செயற்படாமல் இருந்த ஏழு வரையான சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மீள திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சங்கங்கள் மூலம் அந்தப் பகுதி மக்கள் தமக்கு சுயதொழிலுக்கான கடன் வசதிகளை பெற்று வருகின்றனர்- என்றார். (வ-17)

# ஆசிரியர், அதிபர் பதவி உயர்வு குறித்தே அதிகளவு முறைப்பாடு

## குறைகேள் நடமாடும் சேவையில்

தென்மராட்சி, ஓக. 3
யாழ்.மாவட்ட கல்வி வலயங்களால் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான நடத்தப்படும் குறைகேள் நடமாடும் சேவைகளில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் பெரும்பாலானவை பதவியுயர்வுகள், சம்பள உயர்வுகள் தொடர்பானவையே எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி, கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் கடமையாற்றி யாழ். மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றுபவர்களுக்கே பதவியுயர்வுகள், வருடாந்த சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லையென முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்தால் இரு தினங்கள் நடத்தப்பட்ட குறைகேள் நடமாடும் சேவையில் கலந்து கொண்ட 40 பேரில் 36 பேர் இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளானவர்களாகக் காணப்பட்டனர்.

மாகாண கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் உரிய தீர்வுகள் பெற்றுத் தரப்படுமென நடமாடும் சேவையில் உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கணக்காளர், யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குறைகளை கேட்டறிந்தனர்.

இதேவேளை சம்பள நிலுவை தொடர்பாக 4 ஆசிரியர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரித்து உரிய நிதி கிடைத்ததும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தீவக வலய ஏழை மாணவருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஓக. 3
தீவகப் பாடசாலைகளைச் சேர்ந்த416ஏழைமாணவருக்கு வலயப் பணிமனையூடாக கல்வித் தேவைகளுக்கென நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கென நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 2.5 மில்லியன் ரூபா ஆளுநரால் வழங்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஜோன்குயின்ரஸ் தெரிவித்தார்.

மன்னார் மடு வலயப் பணிப்பாளர்களிடமும் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கென தலா ரூபா 2.5 மில்லியனுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் ஆளுநர் பணிமனையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)



# ஒலிபெருக்கிப் பாவனையை குறைத்துக் கொள்ளவும்

## ஆலயங்களிடம் இந்து மகா சபை கோரிக்கை

வலி. வடக்கு, ஓக 3
ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பரீட்சைகளுக்காக தங்களைத் தயார்படுத்தி வருகின்ற நிலையில் ஆலயங்கள் தமது ஒலிபெருக்கிப் பாவனையை குறைத்துக்கொள்ளுமாறு இந்து மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பாக இந்து மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்;

கடவுள் அமைதியே வடிவானவர். அமைதியான சூழலில் வழிபாடாற்றினாலே இறை அருளை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதை விடுத்து திருவிழாக் காலங்களிலும் ஏனைய தினங்களிலும் ஆலயச் சூழலில் ஒலிபெருக்கி சாதனங்களைப் பொருத்தி அவற்றை அதிக சத்தத்துடன் ஒலிக்க விடுவதானது பக்தர்களின் அமைதியான இறை வழிபாட்டுக்கு குந்தகம் விளைவிக்கின்றது.

மேலும் அந்தச் சுற்றாடலில் வசிக்கும் மக்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது.

யாழ்.குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் தினமும் பக்திப் பாடல்களை ஒலிக்கவிடும் செயற்பாடு தற்போது பரவலாகத் தலைதூக்கி வருகின்றது. ஓரிரு ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்தச் செயற்பாட்டை தற்போது எனினும் பல ஆலயங்களும் பின்பற்றி வருகின்றன. 'கோயில் இல்லா ஊரில்குடியிருக்க வேண்டாம்' என்ற மரபுக்கு இணங்க எமது மக்கள் வாழ்கின்ற இடமெங்கும் கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெறுகின்றமை வரவேற்கத்தக்கதே. ஆனால், வழிபாடு என்ற பெயரிலும் பக்தி என்ற பெயரிலும் ஒலிபெருக்கிகளை ஒலிக்க விடுவதென்பதை எமது இந்து மதக் கோட்பாடுகளுக்கு முரணானது.

இதேவேளை, ஆலயங்களில் இந்த ஒலிபெருக்கிகளின் பயன்பாடு காரணமாக தாங்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படுவதாக மாணவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்தினர் இந்து மகா சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இதனால் நோயாளர்களும் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பரீட்சைகளுக்காக தங்களைத் தயார்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் ஆலயங்கள் தமது ஒலிபெருக்கிப் பாவனையை குறைத்துக்கொள்ளுமாறு இந்து மகா சபை வேண்டிக் கொள்கிறது. இந்த விடயத்தில் ஆலய பரிபாலன சபைகள் மற்றும் தர்மகர்த்தாக்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டுமென்றும் இந்து மகா சபை வலியுறுத்துகின்றது என்றுள்ளது. (எ-86)

# பனை அபிவிருத்திக்கு 47 பயிற்சி மையங்கள்

## ஏற்றுமதிக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 3
நாடளாவிய ரீதியில் 47 பயிற்சி நிலையங்கள் ஊடாக பனை அபிவிருத்திச் சபையின் பனை வளம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பனை வளத்தின் ஊடாக உற்பத்தியாளர்கள் நன்மையடையக் கூடியதாக தற்போது நாடளாவிய ரீதியில் 47 பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன.

அந்தந்த பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர்களும் கடமையில் உள்ளனர்.

இவற்றில் அதிகளவு நிலையங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளன. அவற்றின் ஊடாக பிரதேச ரீதியான பனைசார் கைப்பணியாளர்கள் மற்றும் உற்பத்தியார்கள் பயிற்றப்பட்டு வருவதுடன் சிறந்த உற்பத்திகளையும் தயாரித்து வருகின்றனர்.

ஆலோசனைக் கூடம் போன்று செயற்படும் இந்தப் பயிற்சி நிலையங்களில் தகுதியுடைய போதனாசிரியர்கள் கடமையில் இருப்பதால் நவீனத்துவமான தொழில் நடவடிக்கைகள் தொடர்பாகவும், சந்தை வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி தொடர்பாகவும் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 8 போதனாசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். - என்றார். (வ-14)



## டெங்கிலிருந்து பாதுகாக்க மூதூரில் விழிப்புணர்வு



திருகோணமலை,ஒக. 3
மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோய் ஆபத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
டெங்கு நோயை பரப்பக்கூடிய நுளம்புகள் வசிக்கும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அந்த இடங்களையும், சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், மாணவர்கள் ஒன்றிணைந்து விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.விஜயானந்த மூர்த்தியின் அறிவுறுத்தலுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கு உதவியாக சுற்றாடல் முன்னோடி கழகங்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. (ச-40)

## ஆடி அமாவாசை தீர்த்தம் மகாவலி கங்கையில்

திருகோணமலை,ஒக.3
திருகோணமலை, மூதூர், கங்குவேலி ஆதிசிவன் ஆலய வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
இந்தத் தீர்த்தத்திருவிழா மகாவலி கங்கைக் கரையில் இடம்பெறவுள்ளது.
ஆடி அமாவாசையன்று மகாவலி கங்கைக் கரையில்



பிதிர்கடன்களை நிறைவேற்ற பெருமளவான பக்தர்கள் கூடுவர் என்று கூறப்படுகின்றது.
ஆடி அமாவாசை தீர்த்தத் திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக திருகோணமலை, மூதூர் பகுதிகளில் இருந்து விசேட பஸ் சேவைகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-40)

## மாற்றுத் திறனாளிகளுக்கு கிழக்கில் ஆசிரியர் நியமனம்

### முதல் தடவையாக வழங்கியது திணைக்களம்

திருகோணமலை,ஒக.3
கிழக்கு மாகாணத்தில் முதற் தடவையாக மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி. ஏ.நிசாம் தெரிவித்தார்.
இந்த ஆசிரிய நியமனங்கள் மாற்றுத் திறனாளிகள் எழுபேருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இவர்களுக்கான நியமனங்கள் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.
அவர்கள் தமிழ், விஞ்ஞானம், கணிதம் உள்ளிட்ட பாடங்களை கற்பிப்பர்.
வீடுகளுக்கு அருகிலுள்ள பாடசாலைகளிலேயே அவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்த மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் விசேட திட்டம் மாகாண கல்வி திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் அவர்களின் ஆசிரிய செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்தும் அவதானிக்கப்படும்.
ஆசிரிய நியமனத்தில் குறித்த சதவீதமொன்று மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கமைய இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.- என்றார். (ச)



கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசிரியர் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



மட்டக்களப்பு,ஒக.3
மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.
வியாழக்கிழமை அதிகாலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
அதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
வாகரை பதில் பொலிஸ் பரிசோதகர் ரி.ஜெயசீலன் தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்தச் சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். (ச)

## ஆசிரியர்கள் பற்றாக்குறை நிறைவு செய்யப்படவில்லை

### செல்லையா இராசையா கூறுகிறார்

அம்பாறை, ஒக.3
அம்பாறை, காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறை பூரணமாக நிறைவு செய்யப்படவில்லை.
இவ்வாறு, காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா தெரிவித்தார்.
ஏற்கெனவே தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டு இங்கு வந்துள்ள ஒன்பது ஆசிரியர்களையும், இந்தப் பாடசாலையிலேயே நிரந்தரமாகக் கடமையாற்ற ஆவன செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.
இதேவேளை-அரசு புதிதாகப் பாடசாலைகளைத் தெரிவு செய்து தொழில்நுட்பப் பாடநெறிகளை ஆரம்பித்துள்ளது.
இதற்கென அம்பாறை மாவட்டத்தில் மிகக் குறைவான பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
இந்தத் திட்டத்தில் பல தமிழ்ப் பாடசாலைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-30)

## தமிழை உலக மொழியாக ஆக்கியவர் தனிநாயகம்

### அருட்தந்தை நவாஜி அடிகளார் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஒக.3
தமிழ் மொழியை ஆய்வு மொழியாக,உலக மொழியாக மாற்றிய பெருமை தனிநாயக அடிகளாரையே சாரும் என்று கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்தந்தை நவாஜி அடிகளார் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் வியாழக்கிழமை இடம்பெற்ற தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
இந்த விழா தமிழ்த்தூது தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
மட்டக்களப்பில் தனிநாயக அடிகளாரின் நூற் றாண்டு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் மற்றொரு பெருவிழாவாகக் கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடும் உஷ்ணம் நிலவி வருகின்றது. இதனால் மாவட்டத்தின் மேட்டுநிலப் பகுதியில் உள்ள கிராமங்களில் கடும் வறட்சி நிலவி வருகின்றது. அதனால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வரும் கிராமங்களுக்கு பிரதேச சபைகளும், தன்னார்வ தொண்டர் அமைப்புக்களும் குடி தண்ணீரை பவுசர் மூலமாக வழங்கி வருகின்றன. (ச)

## வாழைச்சேனை பொலிஸாருக்கு பரிசோதனை

மட்டக்களப்பு,ஒக.3
பொலிஸ் திணைக்களத்தால் 6 மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தப்படுகின்ற பொலிஸாருக்கான பரிசோதனை வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வியாழக்கிழமை நடைபெற்றது.
ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தப் பரிசோதனை மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. மேவன்சில்வா, வாழைச்சேனை பிரதேசத்துக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்லால் செனவிரத்ன ஆகியோர் பார்வையிட்டனர். (ச)



## கல்முனை நகர எதிர்காலத் திட்டம் குறித்து ஆராய்வு

கல்முனை,ஒக.3
கல்முனை நகர அபிவிருத்தித் திட்ட வரைபு தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் தலைமையில் நடைபெற்றது.
கல்முனை பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நகர அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கல்முனை நகரத்தின் எதிர்காலத் திட்டங்கள், அபிவிருத்திகள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு கலந்து கொண்டோரின்ஆலோசனைகளும் பெறப்பட்டன.
இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசகர் இந்துநில் வீரசூரிய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் டபிள்யூ. டீ.செனவிரத்ன உட்பட பல பொறியியலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்ட கல்முனை நகர அபிவிருத்தி திட்ட வரைபு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-10)



## போலி 1,000 ரூபா வைத்திருந்த நபர் கைது



கொழும்பு,ஓக. 3
இங்கிரியாய - போருவ தண்டிய பிரதேசத்தில் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இங்கிரிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலீஸார் மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் மாபுடுகல, போருவதண்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர். (ச)

# நவீன மயமாகிறது நாடாளுமன்றம்

## யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,ஓக. 3
இலங்கை நாடாளுமன்றம் அமைந்துள்ள கட்டடத்தை முழுமையாக நவீனமயப்படுத்தவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடமைப்பு தொகுதி ஒன்றை நிர்மாணிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள் ளது.
பிரதமர் டி.எம். ஜயரத்ன அமைச்சரவையில் தாக்கல் செய்த இதுதொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
அதனடிப்படையில் நாடாளுமன்றத்தை நவீனமயப்




படுத்தும் புனரமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்கான ஒப்பந்தம் வரையறுக்கப்பட்ட 'சுமிடோமோ மிட்சுய்' என்ற ஜப்பானிய நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது. (ச)

## தேர்தல் சட்டங்கள் குறித்து வேட்பாளருக்கு செயலமர்வு

கொழும்பு,ஓக. 3
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் சட்டம் குறித்து தெளிவு படுத்தவென கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பரவலாக அதிகரித்துள்ளன என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
அதனால் எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் வடமேல் மற்றும் மத்திய மாகாண வேட்பாளர்களுக்கும், 12ஆம்,13ஆம் திகதிகளில் வட மாகாண சபை வேட் பாளர்களுக்கும் செயலமர்வு இடம் பெறவுள்ளது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்தச் செயலமர்வில் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.
இதேவேளை, நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் விருப்பு வாக்கு இலக்கம் வழங்கப்படும் என்று தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது. அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## கொழும்பு தெற்கு துறைமுகத்தை மக்கள் பார்வையிட அனுமதி

கொழும்பு,ஓக. 3
கொழும்பு தெற்கு துறைமுகத்தை பார்வையிடுவதற்கு எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று துறைமுக நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.
400 மில்லியன் அமெரிக்க



டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளைமறுதினம் திங்கட்கிழமை திறந்து வைப்பார்.
கடலின் நடுவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மக்களும் பாடசாலை மாணவர்களும் நேரில் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## குடிதண்ணீர் மாசு அறிய சோதனை

கொழும்பு,ஓக.3
வெலிவேரிய - ரத்பஸ்வல பகுதியில் குடிதண்ணீர் மாசுபடுவது குறித்து விசேட பரிசோதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பரிசோதனையை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் பல்கலைக்கழகம் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.
இரண்டு வாரங்களுக்குள் பரிசோதனையை நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வெலிவேரிய பிரதேச மக்களுக்கும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையே இடம் பெற்ற பேச்சையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
குடிதண்ணீர் பிரச்சினை தீரும்வரை பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# தண்ணீர்ப் பிரச்சினை காவு கொண்டது உயிரை

## படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் சாவு ; 24 பேர் காயம்

## சம்பவ இடம் விரைந்த கோத்தபாய தலைமையிலான குழு முக்கிய பேச்சு

கொழும்பு,ஓக.3
கம்பஹா - வெலிவேரிய பகுதியில் வியாழக்கிழமை இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், இரு ஊடகவியலாளர்கள் உட்பட 24 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.





தமது குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென ஆயிரத்துக்கும்மேற்பட்ட வெலிவேரிய பிரதேச மக்கள் வியாழக்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்த இராணுவம் மற்றும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொண்டமையால் குறித்த பிரதேசத்தில் வியாழக் கிழமை பெரும் பதற்றம் ஏற்பட்டது.
இந்தப் பிரதேச மக்கள் கடைகளை மூடி, கறுப்புக் கொடிகளை ஏந்தி வியாழக்கிழமை நடத்திய போராட்டத்தால் கொழும்பு - கண்டி பிரதான வீதிப் போக்குவரத்து காலைமுதல் இரவுவரை முடங்கியது. தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லையென பிரதேச மக்கள் உறுதிபடத் தெரிவித்ததையடுத்து, அவர்கள் மீது இராணுவத்தினரும், பொலிஸாரும் துப்பாக்கி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
இதையடுத்து பிரதேசவாசிகள் பாதுகாப்புப் படைத்தரப்பு மீது கல் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து, பாதுகாப்புத் தரப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், இரு ஊடகவியலாளர்கள் உட்பட 24 பேர் காயமடைந்தனர் என கம்பஹா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
குறித்த பிரதேச மக்கள் உட்பட அதனையண்டிய ஏனைய சில பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் அமர்ந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பாடசாலை வான் மற்றும் அம்புலன்ஸ்களுக்கு மட்டுமே பிரதேசவாசிகள் பாதையால் பயணிக்க இடமளித்தனர்.
போராட்டத்தைக் கைவிட்டு அமைதியாக வெளியேறுமாறு பொலிஸார் வழங்கிய அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொள்ளாத மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதையடுத்து, மாலை 4.20 மணிக்கு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர்.
இதன்போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ உயர் அதிகாரியொருவர், ''இன்னும் 5 நிமிடங்களில் இந்த இடத்திலிருந்து கலைந்து செல்லுங்கள், இல்லாவிட்டால் நாங்கள் உங்களை அப்புறப்படுத்த வேண்டியேற்படும். எம்முடன் பிரச்சினைக்கு வராதீர்கள். தயவு செய்து இங்கிருந்து கலைந்து செல்லுங்கள்'' எனத் தெரிவித்தார்.
இராணுவ அதிகாரியின் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளாத மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பாதுகாப்புத் தரப்பினர் துப்பாக்கி, கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களை மேற்கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

### பாதுகாப்புச் செயலர் தலைமையில் பேச்சு

வெலிவேரிய பகுதியிலுள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் முக்கிய பேச்சு இடம்பெற்றது.
இதன்போது குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த தேரர்கள் உட்பட பிரதேச மக்கள் சிலருடன் பேச்சு நடத்தி இணக்கம் காணப்பட்டுள்ளது.
இங்கு இயங்கிவரும் தொழிற்சாலையை இரு வாரகாலத்துக்கு தற்காலிகமாக மூடுவதுடன், 10 சுயாதீனக் குழுக்களால் மேற்படி தொழிற்சாலை மற்றும் பிரதேச மண், குடிதண்ணீர் தொடர்பில் ஆய்வு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை குறித்த பிரதேசத்துக்கு பவுசர் மூலம் தண்ணீர் விநியோகிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியாவில் புதிய மாநில உருவாக்கம்; எடுத்தேன் கவிழ்த்தேன் நிலையாகுமா?

அகன்று விரிந்த இந்திய உபகண்டத்தில், தெலுங்கானா என்ற புதிய மாநிலம் உருவாகப்போகிறது. மத்திய புதுடில்லி அரசு அதனைத் தோற்றுவிக்க முடிவு செய்துள்ளது. இப்போது இயங்கும் இருபத்தெட்டு மாநிலங்களுடன் அதுவும் சேர்ந்து 29 மாநிலங்கள் பாரத நாட்டில் மக்கள் நலன் நாடி இயங்கப் போகின்றன.

இப்போதுள்ள ஆந்திர மாநிலத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து எடுத்துப் புதிய தெலுங்கானா மாநிலம் தோற்றுவிக்கப்பட உள்ளது. தெலுங்கானா வாழும் மக்களின் நீண்டகாலத் தனியாட்சிக் கோரிக்கை நிறைவேற உள்ளது.

உத்தரகண்ட், ஹரியானா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் போன்ற வட இந்தியாவின் சிறிய மாநிலங்கள் போன்று தென் இந்தியாவில் தெலுங்கானா தனிமாநிலமாகப் போகிறது.

இந்திய மத்திய அரசிற்கான தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெற உள்ள தருணத்தில், புதிய மாநிலம் ஒன்றைத் தோற்றுவிக்க புதுடில்லி மத்திய காங்கிரஸ் அரசு முடிவு செய்திருப்பது குறித்து, இந்திய அரசியல் நோக்கர்கள் கடும் விமர்சனம் செய்துள்ளனர்.

மாநிலம் ஒன்று புவியியல் அல்லது மொழிவழி கொண்டு பிரிக்கப்பட்டால், அது ஆக்கபூர்வமானதாக, இரண்டு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பல வகைகளிலும், வழிகளிலும் மேம்பாடுகளைத் தரும் வகையினதாக அமைய வேண்டும்.

ஆனால், ஆட்சியில் உள்ளவர்களின் நலன்களையோ, விருப்பு வெறுப்புகளையோ அத்திவாரமாகக் கொண்டு அது மேற்கொள்ளப்படும் போது, பிரிக்கப்படும் இரண்டு மாநிலங்களிலும் பிரச்சினைகளை உருவாக்கவும், வளர்ச்சியை ஊறுபடுத்தவுமே வகை செய்யும் என்று கருதலாம்; நம்பலாம்.

ஆந்திர மாநிலம் பிரிக்கப்படுவதால், சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளுக்கும் உண்டாகக் கூடிய பாதிப்புகளைவிட நன்மைகளே கூடுதலாகக் கிடைக்குமானால் அது வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

நாடு முழுவதையும் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலைக் கருத்தில் கொண்டு அரசியல் நோக்கத்துக்காகவும் இந்த முடிவை எடுத்திருக்கலாம். இரண்டு மாநிலங்களிலும் வெற்றிபெறுவது காங்கிரஸின் திட்டமாகவும் இருக்கலாம்.

ஆந்திர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு கணிசமான அளவு சரிவு கண்டுவரும் நிலையில், சந்திரசேகராவின் தலைமையிலான தெலுங்கானா ராஷ்டிர சமிதியுடன் காங்கிரஸ் கூட்டுச் சேருவதன் மூலம் தெலுங்கானா மாநிலத்திலும் ஆந்திரா மாநிலத்திலும் வெற்றியடைய அதிக வாய்ப்புண்டு. அதனை நாடியே ஆந்திராவை இரண்டாக்கும் திட்டம் என்று கொள்ள இடமுண்டு. மொத்தத்தில் அரசியல் நோக்கமே பிரதான காரணம் என்பது ஓரளவு புலனாகிறது.

இப்போதுள்ள ஆந்திர மாநிலம், 23 மாவட்டங்களைக் உள்ளடக்கியது. 294 சட்டப் பேரவைத் தொகுதிகளையும் 42 லோக் சபா தொகுதிகளையும் கொண்டுள்ளது. தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படுமானால் சட்டப் பேரவைத் தொகுதிகளில் 119 தெலுங்கானா மாநிலத்துக்குள் வந்துவிடும். லோக் சபா தொகுதிகளிலும் தெலுங்கானாவுக்குப் பதினேமு ஆசனங்கள் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும், ஒரு மாநிலத்தைப் பிரித்து இரண்டு கூறுகளாக்குவது இலகுவான ஒன்றல்ல என்று அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும்போது, இந்திய மத்திய அரசு இரு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிவரும். ஒன்று, மாவோயிஸ்டுகளின் பிரச்சினை. அடுத்தது, தனி மாநிலக் கோரிக்கைகள் நாட்டின் பல பகுதிகளில் தலையெடுக்க ஊக்குவிப்பாக அமையும் என்று நிச்சயம் நம்பலாம்.

மேலும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் ஆதிக்கம் பல பகுதிகளில் உள்ளது. பலம் பொருந்திய பெரிய மாநிலமாக உள்ள ஆந்திராவால் சமாளிக்க முடியாத இப்பிரச்சினையை சின்னஞ்சிறு மாநிலமான தெலுங்கானா எப்படிச் சமாளிக்கப் போகிறது? தனி மாநிலக் கோரிக்கைகள் மகாராஷ்டிரத்தில் விதர்பா, உத்தர பிரதேசத்தில் பண்டல்கண்ட், பூர்வாஞ்சல் - மேற்கு வங்காளத்தில் கூர்க்காலாந்து, அசாமில் போடோலாந்து ஆகிய பகுதிகளில் சமகாலத்தில் தீவிரமாகத் தலையெடுத்து வருகிறது.

மொத்தத்தில், ஆந்திராவைப் பிளந்து தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவது என்ற இந்திய மத்திய அரசின் புதிய முடிவானது, எடுத்தேன், கவிழ்த்தேன் என்றாகி விடும் பெரும் ஆபத்து உண்டு என்பதே மேலோங்கும் என எதிர்பார்க்கலாம்.

# திரியில் நெய்யாய் இருப்பவர்

தர்ஷன்




ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர்களது வாழ்க்கையில் நம்பகமான ஆலோசகர் தேவைப்படுகிறார். முக்கியமாக நல்ல நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். ஒருவருடைய சிந்தனைகளையும், குண இயல்புகளையும் பட்டை தீட்ட, உதவி செய்ய அவரை நன்கு உணர்ந்த ஒரு நண்பர் தேவைப்படுகிறார்.

குடும்ப உறவுகளைவிட நமது துக்கத்திலும், மகிழ்ச்சிலும் பங்குகொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தாயிடமும், மனைவியிடமும் ஏன் தந்தையிடம் கூட ஆலோசனை கேட்க முடியாத சில விடயங்களை நண்பர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு தெளிவைத், தீர்வைப் பெறலாம்.

துன்பம் வரும் வேளையில் கடவுளை நினைக்கிறோமோ இல்லையோ, உதவி கோர நல்ல நண்பர்கள் பற்றிய எண்ணம் நம்மையும் அறியாமல் நம் மனதில் உதயமாகிவிடுகிறது. பரஸ்பரம் அன்பை மட்டும் அல்லாமல் துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளத்தக்க இந்த ஆற்றல் நட்புக்கு மட்டுமே உரிய சிறப்பாகிறது.

ஜாதி, மதம், இனம், ஏழை, செல்வந்தன் வயது என்பவற்றை எல்லாம் தாண்டி உருவாவது தான் நட்பு. இப்படிப்பட்ட நட்பு ஒருவரை முதல் தடவையாக சந்தித்தவுடன் வருவதில்லை, பல நாள்கள் பழகிய பின்னரே நட்பு வலுப்பெறுகிறது. நண்பர்கள் எப்போதும் தங்களுடைய வட்டத்தை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வார்கள். இது யதார்த்த உண்மை.

இன்றைய உலகில் நல்ல நட்பென்பது ஒரு சமுத்திரம் போன்றதாகிவிட்டது ஏனென்றால் எவராலும் சரி இன்று நட்பு வட்டம் இல்லாமல் இருக்கவே முடியாதென்றாகி விட்டதே? உதாரணமாக முகப்புத்தகத்தை எடுத்து கொள்வோம். இது நண்பர்களை தேடுவதற்கான ஒரு சமூக வலைத்தளம். இதிலே பல புதிய நண்பர்கள் எமக்கு அறிமுகமாகின்றனர். இதனால் நண்பர்கள் வட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. தமிழ் சினிமாவை எடுத்து கொண்டால் அங்கே கூட நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏராளமான திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. அண்மையில் கூட பாஸ் என்கிற பாஸ்கரன் திரைப்படத்திலே அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு சொல் ''நண்பேன்டா'' இது எல்லோருடைய வாயிலும் உச்சரிக்கப்படும் ஒன்றாக இருந்தது. இதுமாத்திரமல்லாது நண்பன் என்ற பாத்திரம் இல்லாமல் ஏதாவது தமிழ் சினிமா உண்டா? அந்த அளவுக்கு நட்பினுடைய ஆதிக்கம், வலிமை உலகளாவிய ரீதியில் செல்வாக்கு பெற்ற ஒன்றாகக் காணப்படுகிறது.

நண்பனானவன் உறவினராகவும் எம்மிடையே வந்து போவான். எப்படி என்றால் நாம் எம் நண்பர்களை மச்சான், மாமா, சித்தப்பு என்று அழைப்பதுண்டு. இந்த வகையில் அவன் எங்களோடு மிகவும் நெருக்கமானவனாக காணப்படுவான். ''திரியாய் என்றும் இருப்பவனல்ல சொந்தக்காரன். திரியில் நெய்யாய் இருப்பவன் தான் சொந்தக்காரன்..'' என்ற பாடல் வரிகள் எமது பரம்பரை சொந்தத்தை பற்றியது அல்ல இடையிலே நாம் தேர்ந்தெடுத்த நட்பை பற்றியதே. இது நட்பின் உன்னதத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இந்த நட்பு தான் உண்மையான இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்ளும் சொந்தக்காரன். எனவே எப்போதும் நல்ல நட்பைத் தேடிக் கொள்வது நன்மை பயக்கும்.

நல்ல, நெருங்கிய நட்பு குறித்த தகவல்கள் இலக்கியங்களிலும், புராணங்களிலும் பலவாறாக கையாளப்பட்டுள்ளன. இவை அன்று தொட்டு இன்று வரை மனிதர்கள் மத்தியில் நட்பு நிலைபெற்றிருக்கிறது என்பதை நிரூபிப்பதாகவே உள்ளன. இதைவிட திருவள்ளுவருடைய திருக்குறளில் நட்பை பற்றிய கருத்துக்கள் அலசப்பட்டுள்ளன. தீய நட்பு, கூடா நட்பு போன்ற அதிகாரங்களில் இவை தெளிவாக கூறப்பட்டுள்ளன.

ஒரு நண்பன் இன்னொரு நண்பனை நல்ல வழிக்கு கொண்டு செல்பவனாக இருத்தல் வேண்டும். ஆனால் இன்று நாம் இந்த நட்பு என்ற புனிதமான சொல்லை வைத்துகொண்டு அவசியமற்ற பல சிக்கல்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்.


இன்று நண்பர்களை எதற்காக பயன்படுத்துகின்றோம்? வீதிகளிலே ஒன்றாக சுற்றுவதற்கும் மது அருந்துவதற்கும். யாருடனாவது தகராறு என்றால் ஒன்றாக சேர்ந்து சண்டை போடுவதற்கும்தான். உண்மையில் இது நட்பு அல்ல. நல்ல நட்பு ஒருவருடைய மிகச் சிறந்த ஆயுதம் என்றும் கொள்ளலாம். புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். பழைய நண்பர்களையும் தொடர்பில் வையுங்கள். புதியவர்கள் வெள்ளி என்றால் பழையவர்கள் தங்கம் என்ற பொன் மொழிக்கு அமைவாக நண்பர்களை எப்போதும் நினைவுகூர்ந்து அவர்களை நல்லவற்றுக்கே பயன்படுத்துவோம்.

''ஓர் ஊரில் ஆறு இருந்தது அந்த ஆற்றிலே பல வருடங்களாக ஓர் ஆமை வசித்து வந்தது. ஆற்றங்கரையினிலே ஓர் ஆலமரம் தன்னுடைய விழுதுகளை பரப்பி விருட்சமாக வளர்ந்து நின்றது. அங்கே பல பறவைகள் முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்து சந்தோசமாக வாழ்ந்து வந்தன. ஆற்றிலே இருந்த ஆமை அந்த குருவிகளினுடைய சத்தத்தை கேட்டு மகிழ்சி கொள்வது வழமை. ஆலமரத்தில் தொடர்சியாக முட்டை இட்டு வந்த ஒரு குருவிக்கும் அந்த ஆமைக்கும் பழக்கம் ஏற்பட்டது. இவை இரண்டும் பழக ஆரம்பித்தன. அப்படியே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நண்பர்கள் ஆகின. இப்படி இருக்கும் போது ஆற்றுக்கு அருகில் இருக்கும் ஒரு காட்டில் உள்ள குரங்கொன்று அந்த ஆல மரத்திலே ஏறி குருவிகளின் முட்டைகளை குடிக்க ஆரம்பித்தது. குருவிகளால் இதை தடுக்க முடியவில்லை. இங்கே வாழ முடியாது, வேறு மரம் பார்ப்போம் என்று கூறிவிட்டு எல்லா குருவிகளும் பறந்தன. ஆனால் ஒரு குருவி மட்டும் அங்கிருந்து போகவில்லை இந்த குரங்காருக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று அது நினைத்தது. ஆமையிடம் சென்று தங்களுக்கு நேர்ந்த இக்கட்டைக் கூறியது. குருவியின் கவலையை புரிந்து கொண்ட ஆமை குரங்கை அழைத்து இந்த குருவியினுடைய உறவினர் ஆற்றினுடைய மறுபக்கத்தில் தங்களது கூடுகளை அமைத்துள்ளன அந்த ஆற்றைக் கடந்து உம்மை விட்டு விடுகிறேன் அங்கே நீர் தேவையான முட்டைகளை குடிக்கலாம் என்றது.

ஆமை ஒரு சேதமடைந்த தோணியின் ஓட்டையில் தண்ணீர் உள்ளேவராதவாறு பொச்சை அடைத்தது. குரங்காரை தோணியின்மேல் ஏற்றியது. அந்த குருவியும் அருகில் அமர்ந்தது. தோணி ஆற்றின் நடுப்பகுதிக்குச் சென்றதும் ஆமை குருவிக்கு சைகை காட்ட குருவி அங்கிருந்து பறந்து சென்றுவிட்டது. ஆமை ஓட்டையில் அடைத்த பொச்சை இழுத்து அந்த ஓட்டை வழியாக வெளியே வந்தது. குரங்கால் தப்பிக்க முடியவில்லை. தண்ணீர் தோணியை நிரப்பியது, குரங்கார் தத்தளித்து இறந்து போனார். குருவிகள் மறுபடியும் அந்த ஆலமரத்தில் வாழ ஆரம்பித்தன. ஆமைக்கு எல்லாக் குருவிகளும் நண்பர்களாகின. இப்போது ஆமை ஆற்றை விட குருவிகளுடனேயே அதிக பொழுதைக் கழிக்கின்றது''

சிங்கள மூலம் : 'மவ்பிம'
சந்துன் ஜீவந்த
தமிழில் : வீ.எஸ்.ரீ

# சபாஷ்; சரியான போட்டி தான்



சாதாரண பூப்பறிக்கும் கொக்கையால் பறிக்க இயலாது போகுமானால், நுனியில் கத்தி கட்டிய கொக்கத்தடியால் அறுத்து வீழ்த்த இயலும் என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு. நியாயமான விதத்தில் இலேசாக ஒரு தேவையை நிறைவேற்றிக் கொள்ள இயலாது போகுமானால், கடுமையான விதத்தில் பலாத்காரமாக அதனை நிறைவேற்றிக் கொள்ள இயலும் என்பது இதன் உள்ளார்த்தம். கடும் போக்கில் நிறைவேற்ற இயலாத ஒன்றை மென்போக்கால் நிறைவேற்ற இயலும் என்பது பெரும்பாலும் நடைமுறைச் சாத்தியமற்றதொன்று. இருந்த போதிலும் ஒரு சில சந்தர்ப்பங்களில் அத்தகைய மென்போக்கு அணுகுமுறையும் பலனளிப்பதுண்டு. அவ்வாறானால் கடும்போக்கும் மென்போக்கும் என்ற வகையில் இங்கு அர்த்தப்படுத்த முயல்வது எதனை?

கடும் போக்குக்கு வரதராஜப் பெருமாளையும் மென்போக்குக்கு விக்னேஸ்வரனையும் குறிப்பிடுவது இன்றைய அரசியல் கள நிலைக்குப் பொருத்தங்கூடும்.

வரதராஜப் பெருமாள் எதனைச் சாதிக்க முயன்றார்? விக்னேஸ்வரன் எதைச் சாதிக்க முயலப் போகிறார்? வரதராஜப் பெருமாள் எதனைச் சாதிக்க முயன்றார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் 1980 களை நோக்கிப் பின் நகர்ந்தாக வேண்டும். அதேவேளை, விக்னேஸ்வரன் சாதிக்க முயலப் போவது குறித்து தெரிந்து கொள்ள வேண்டுமானால் இன்றைய நாட்டில் அரசியல் நிலை குறித்து தெரிந்து கொண்டாக வேண்டும்.

வரதராஜப்பெருமாளூடாக நிறைவேற்றிக் கொள்ள இயலாததை விக்னேஸ்வரன் ஊடாக நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டுக் காய் நகர்த்தும் தரப்பு வேறு எதுவுமல்ல. எமது பெரிய அண்ணன் உறவு முறையான இந்திய அரசே.

அன்று வரதராஜப் பெருமாளூடாக வடக்கு, கிழக்கு என்ற பலாப்பழத்தை பிடுங்கியெடுக்க ராஜீவ் காந்தி முயற்சித்தார். இன்று விக்னேஸ்வரன் ஊடாக வடக்கு என்ற பலாப் பழத்தைப் பிடுங்கி எடுக்க மன்மோகன் சிங் முயற்சிக்கிறார்.

இதனைப் புரிந்து கொள்ள புத்திசாலிகளாகத்தான் இருந்தாக வேண்டும் என்பதல்ல. சாதாரண அரசியல் அறிவே இதற்குப் போதுமானது.

ராஜீவ்காந்தி -ஜே.ஆரை வற்புறுத்தி மேற்கொண்ட இந்திய -இலங்கை ஒப்பந்தத்தையடுத்து 1988 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று நடத்திய வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு 71 ஆசனங்களில் 41 ஐக் கைப்பற்றி, அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அந்த வெற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்குக் கிடைத்த வெற்றி என்பதை விட இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றியாகவே கொள்ளத்தக்கது. ஏனெனில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பூரண ஆசீர்வாதத்துடனும், அந்த வேளையில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையின் உதவியுடனும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பால் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.

ஜே.ஆரை வற்புறுத்தி அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை மேற்கொண்ட ராஜீவ்காந்தி , மாகாணசபை முறைமையூடாக வடக்கு,ள கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு கைப்பற்ற வழிவகை செய்த பின்னர், இந்தியாவின் தாளத்துக்கு ஆடக்கூடிய ஒருவரை முதலமைச்சராக ஆக்கிக் கொள்ளும் முனைப்புடன் காய் நகர்த்தினார். அதற்குப் பொருத்தமான நபராக அமைந்த வரதராஜப் பெருமாள் இந்திய அரசின் பூரண ஆசீர்வாதத்துடன் வடக்கு ,கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக அமர்த்தப்பட்டார். அது சாதாரணமானதொரு செயற்பாடல்ல. ஏனெனில் சண்டியன் பாத்திரம் தாங்கிச் செயற்பட்டதன் மூலமே இந்தியா தனது இலக்கில் வெற்றி கண்டது. ஒரு வகையில் அது இலங்கையின் இறைமையை மீறும் வகையில் இலங்கையின் வான்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து உணவுப் பொட்டலங்களை விநியோகிக்க பலாத்கார வழிமுறை மூலமே அன்று இந்தியா தனது மேலாண்மையை நிலை நிறுத்திக் கொண்டது. ஆயினும், இந்தியாவால் தனக்குத் தேவைப்பட்டதை இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள இயலாது போய்விட்டது. கைக்கெட்டியது வாய்க் கெட்டாமல் போனமை போன்று வரதராஜப் பெருமாளால் வடக்கு, கிழக்கு மாகாணசபை முதல்வராக நிலைத்து நிற்க இயலாது போயிற்று. தமிழ்த்தேசிய இராணுவத்தை நிறுவப்போய் பிரேமதாஸா அரசின் மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாக வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. இந்தியாவுடன் எப்போதுமே பிரேமதாஸா பகைமை பாராட்டி வந்ததால் பிரேமதாஸா அரசிடமிருந்து வரதராஜப் பெருமாளுக்கு எத்தகைய ஆதரவும் கிட்டவில்லை. தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் கடைசியில் வரதராஜப்பெருமாள் வடக்குக் கிழக்கைத் தனி இராச்சியமாகப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்கு ஓடித் தப்பினார். இதனால் வரதராஜப் பெருமாள் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அதிகாரத்தைத் தனது கைகளில் எடுத்துக் கொள்ளும் இந்தியாவின் முயற்சியும் தோல்வி கண்டது. தொடர்ந்து வடக்கு ,கிழக்கு மாகாண சபை நிர்வாகம் பிரேமதாஸா அரசால் கலைக்கப்பட்டது.

அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டில் தனியாக கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் வரை வடக்குக்கோ, கிழக்குக்கோ மாகாண சபைத் தேர்தலெதுவும் நடத்தப்படவில்லை. 1988 ஆம் ஆண்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களுக்கு பின்னர், 25 ஆண்டுகள் கழித்து தற்போது வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்த அரசு தயாராகியுள்ளது. அதாவது வடமாகாணத்தின் நிர்வாக அதிகாரத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொள்ள முதலமைச்சரொருவர் தெரிவாகவுள்ளார்.

இந்த நிலையில் கண்களை மூடிக் கொண்டு இருக்க இயலுமா? 1988 இல் வரதராஜப் பெருமாளூடாக நிறைவேற்றிக் கொள்ள இயலாது போனதை தற்போது வேறு எவர் மூலமாவது நிறைவேற்றிக் கொண்டாக வேண்டுமென மன்மோகன் சிங் எண்ணியிருக்கக் கூடும். அதாவது, காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய வட மாகாண சபையை உருவாக்கி, அதனை இயக்கும் 'றிமோட் கொன்றோலாக'த் தான் இயங்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த 'றிமோட் கொன்றோல்' திறன்பட இயங்க அதற்கு சிறந்ததொரு 'பற்றரி' பொருத்த வேண்டியுள்ளது. ஆதலால் விக்னேஸ்வரன் என்ற 'பற்றறி'யைப் பயன்படுத்தி, தான் வடக்கு மாகாண சபையை வழி நடத்தும் 'றிமோட் கொன்றோலா'க ஆவதற்கு இந்தியா திட்டமிட்டுக் காய் நகர்த்தி வருகிறது. இது ஒரு வகையில் ராஜீவ்காந்தி கலந்து கொண்ட கிரிக்கெட் போட்டியின் முதலாவது இன்னிங்ஸின் தோல்வியின் பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் தான் பங்குபற்றி வெற்றி பெறுவதற்கான மன்மோகன் சிங்கின் முயற்சி எனக் கொள்வதில் தப்பில்லை.

இந்த இரண்டாவது இன்னிங்ஸை விளையாடுவதற்கு ஆவேசமாக, தான் எதிர்கொள்ளும் அனைத்துப் பந்துகளையும் விளாசித் தள்ள முயலும் துடுப்பாட்ட வீரர் பொருத்தமானவராக அமையமாட்டார். நின்று நிதானித்து தான் எதிர்கொள்ளும் பந்து வீச்சுக்களின் தார தன்மியத்தை எடைபோட்டு துடுப்பைப் பயன்படுத்தும் வீரரே அவசியமாகிறார். இந்த இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட குமார் சங்ககார போன்ற துடுப்பாட்ட வீரரொருவரை இந்தியா தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் இதுவே. குமார் சங்கக்கார தாம் எதிர்கொள்ளும் பந்துவீச்சுக்களை அவதானத்துடன் எதிர்கொண்டு உரிய முறையில் தடுத்தாடும் திறமைமிக்க கிரிக்கெட் வீரர். விக்னேஸ்வரனும் அத்தகையதொரு திறமைசாலியே.

அதேவேளை, வரதராஜப் பெருமாளோ, சனத் ஜெயசூரியாவைப் போன்றதொரு தன்மை கொண்டவர். தாம் எதிர்கொள்ளும் பந்துகள் சகலதையும் தடுத்தாடி பவுண்டரி, சிக்ஸர் என்று எல்லைக் கோட்டுக்கு அப்பால் அனுப்பும் முனைப்புடன் ஆக்ரோசமாக விளையாடும் போக்குக் கொண்டவர். ராஜீவ் காந்தி,சனத்ஜெசூரியா போன்ற ஆக்ரோசப் போக்குக் கொண்ட வரதராஜப் பெருமாளைக் கள்மிறக்கி ஆடவைத்த, பலாத்காரப் போக்கில் ஆட நினைத்த கிரிக்கெட் ஆட்டம் தோல்வியையே அளித்தது. இதனால் கத்திகட்டிய கொக்கத்தடியால் பலாப்பழம் பறிக்க முயன்ற வரதராஜப் பெருமாள் இலங்கையை விட்டோடி இந்தியாவில் தஞ்சம் புக நேர்ந்தது. இன்றும் கூட அவரது அந்த நிலையில் மாற்றமேதுமில்லை.

ராஜீவ்காந்தியின் நெறிப்படுத்தலில் வரதராஜப்பெருமாள் ஆடிய முதலாவது இன்னிங்ஸில் தோல்வி காணநேர்ந்த பின், இன்று விக்னேஸ்வரனை ஆட வைப்பித்து இரண்டாவது இன்னிங்ஸில் வெற்றிபெற மன்மோகன்சிங் தயாராகி வருகிறார். விக்னேஸ்வரன், வரதராஜப் பெருமாள் போன்று கத்திகட்டிய கொக்கத்தடியால் பலாப்பழத்தை அறுத்து வீழ்த்தும் போக்குடையவராய் அல்லாது, சிறு கொக்கையால் இலேசான விதத்தில் பூப்பறிக்க முயலும் போக்குடையவராக இருப்பதே இவ்விருவருக்குமிடையே காணத்தக்க வேறுபாடாகும். அந்த வகையில் சிங்களத் தரப்புக்களுடன் சுமுகமான விதத்தில் கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தக்கதொரு பிரமுகராக விக்னேஸ்வரன் அடையாளப் படுத்தப்படுகிறார். சிங்கள சமூகத்தின் மத்தியில் விக்னேஸ்வரன் குறித்து கடும் விமர்சனப்போக்கு நிலவவில்லை. முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசா நியமிக்கப்பட்டிருப்பினும் சிங்கள சமூகத்தின் பார்வை வித்தியாசமானதொன்றாக அமைந்திருக்கும். இந்தியா இவை யாவற்றையும் தெட்டத் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளது. உண்மையில் இன்று ஆயுதப் போராட்டம் என்றல்லாது அரசமைப்புப் போராட்டமே எம் முன்னாலுள்ளது. அதாவது அரசமைப்பின் பிரிவுகள், உப பிரிவுகள், ஏன் அவற்றில் அடங்கியுள்ள வசனங்களின் அர்த்தப்படுத்தல்கள் மீதான போர் என்றே இது கொள்ளத்தக்கது. மாகாண சபைகளுக்கு காணி, பெலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டமே இது. எனவே சட்டத்துறை நுணுக்கங்களில் திறமை மிக்க விக்னேஸ்வரன் போன்று வேறெவரும் முதலமைச்சர் பதவிக்குப் பொருத்தமானவராக அமைந்து விடப் போவதில்லை.

இன்றைய அரசியல் சூழ்நிலையை உற்று நோக்கினால், வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்தி முடிப்பதற்கு முன்னர் அரசு அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கி விடப்போவதில்லை என்பது தெளிவாகத் தோன்றுகின்றது. ஆதலால் அரசு காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாதொழிப்பதானாலும் அது விக்னேஸ்வரன் வடமாகாண சபை முதலமைச்சராகிய பின்னரே சாத்தியமாகக் கூடும். தற்போது அந்த அதிகாரங்களை நீக்கிக் கொள்ள அரசு முயற்சி மேற்கொண்டதன் காரணமாக இந்தியாவினதும், ரவூப் ஹக்கீம், டியூ குணசேகர, ராஜித சேனாரட்ண, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகிய தனது பங்காளிகளினதும் எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தது. அதேவேளை, விக்னேஸ்வரன் வட மாகாண சபையின் முதலமைச்சர் ஆனதன் பின்னர் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் அடங்கியுள்ள மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க அரசு முயலுமானால் சட்ட வல்லுநரான விக்னேஸ்வரனுடனும் முரண்பட வேண்டி நிலை அரசுக்கு ஏற்படக் கூடும். இதன் அடிப்படையிலேயே ராஜீவ்காந்தியின் முதலாவது இன்னிங்ஸ் தோல்வியளித்தாலும், மன்மோகன் சிங்கின் இரண்டாவது இன்னிங்ஸ் இந்தியாவுக்கு வெற்றியை ஈட்டித்தருமா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆனாலும் மறுபுறம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் விளையாட்டுத் திறமையின் அடிப்படையில் நோக்கும் போது மன்மோகன் சிங்குக்கும் கூட விளையாட்டுக் காட்டுவதொன்றும், நினைக்கும் அளவுக்கு மஹிந்தவுக்குப் பெரும் சிரமமானதொன்றாக அமையப் போவதில்லை எனக் கொள்ள வேண்டியுள்ளது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## 'குட்டிப்புலி' திரைப்பட பாணியில் நூதன திருட்டு

### வசமாய் மாட்டினர் இருவர்

குட்டிப்புலி திரைப்படப் பாணியில் கோயில் உண்டியலில் இருந்து பணத்தைத் திருட முற்பட்ட இருவர் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பொது மக்களால் பிடிக்கப்பட்ட சம்பவம் சுன்னாகம் நகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்றது.

சுன்னாகம் ஐயனார் வீதியில் உள்ள வைரவர் ஆலய உண்டியலினுள் இருவர் மாறி மாறி ஏதோ ஒன்றை உள்ளே விடுவதும் அதனை எடுப்பதுமாய் இருப்பதை அந்தப் பகுதியில் உள்ள இளம் பெண் ஒருவர் அவதானித்துள்ளார்.

அவர்கள் உண்டியலில் உள்ள பணத்தைத் திருடுவதாக உணர்ந்த அந்தப் பெண் அயலில் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு வந்துள்ளார். அவர்கள் வருவதைக் கண்டதும் குறிப்பிட்ட இருவரும் தப்பி ஓட முற்பட்டுள்ளார்கள்.

அவர்களைத் துரத்திய இளைஞர்கள் இருவரையும் பிடித்து விசாரித்ததைத் தொடர்ந்து தென்னம் ஈர்க்கில் சுவிங்கத்தை ஒட்டி உண்டியலின் உள்ளே விட்டு பணத்தை எடுத்துள்ள விடயம் தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்ட இருவரும் 15 வயது மற்றும் 18 வயதுடையவர்கள் ஆவர். இவர்கள் இருவரும் கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். (ந-86)

## கீரிமலை வரை சேவை வேண்டும்

வலி. வடக்கு, ஓக.3



காங்கேசன்துறை வீதி வழியாக மாவிட்டபுரம் வரை சேவையில் ஈடுபடும் தனியார் மினி பஸ் சேவையை கீரிமலை வரை நீடிக்குமாறு மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக குறித்த பகுதியில் மக்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்டுள்ள போதிலும் குறித்த பாதை யில் போக்குவரத்து வசதி கள் இன்மையால் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே தமது பல்வேறு தேவைகளுக்கும் செல்ல வேண்டியவாகளாக உள்ளனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பிரதேச செயலகம், கமத்தொழில் திணைக்களம், வங்கிகள் எனப் பல தேவைகளுக்கும் வருவதில் போக்குவரத்து வசதிகள் இன்மையால் இந்தப் பகுதயில் வாழும் மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இந்த நிலையில் மினி பஸ் சேவையை நீடிக்க வேண்டும் என கிராம அபிவிருத்தி சங்கங்கள், பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (வ-86)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும், நுண்கலைமாணி நாட்டிய கலா வித்தகர் திருமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான பிருந்தா ரவிந்தினி யூட் சாந்தராஜின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கொழும்பு நாட்டியக் கலாமந்தீர் இயக்குநர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல் கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் கலந்து கொள்வர். (ந)

## நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.3

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் பயன்படுத்தப்பட்டுவரும் நிறுத்தல் அளவை மற்றும் தராசுகளுக்கு முத்திரையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

இதற்கமைவாக எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் மல் லாகம் பிரதேச சபை அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வர்த்தகர்கள் வருகைதந்து தராசுகளுக்கு முத்திரையிடலை மேற் கொள்ளுமாறு வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (ந-14-36)

# தண்ணீருக்காக அலையும் கால்நடைகள்

யாழ்ப்பாணம், ஓக.3

தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக கந்தரோடைப் பகுதியில் உள்ள குளங்கள் வற்றியுள்ளதால் விவசாயிகள் வயலுக்கு தண்ணீர் இறைப்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். அந்தப் பகுதி கால்நடைகளும் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன.



வறட்சிக் காலத்துக்கு முன்னதாக குளங்களில் வான் தோண்டல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பெரிய குளங்கள் உட்பட சிறிய குளங்களும் நீரினை சேமித்து வைக்க முடியாமல் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. குளத்து நீரை நம்பி தோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் வயல்களுக்கு நீரினைப் பாய்ச்ச முடியாமல் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி கிணறுகளில் இருந்து நீரினை பெற்று வயல்களுக்கு இறைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் விவசாயிகள் போதிய நீரினை கிணற்றில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் ஊற்றுக்கு ஏற்ப நீரினைப் பெறவேண்டியுள்ளது.

காலநிலை சீராக இருக்கும் நேரத்தில் நீரினை சேமித்து வைக்கக்கூடிய வான் தோண்டல் பணிகளை மேற்கொண்டிருந்தால் தற்போது வறட்சிக் காலத்தில் இவ்வாறான தொரு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குளங்கள் வற்றியுள்ளதால் அந்தப் பகுதி கால்நடைகளும் நீரின்றி அலைந்து திரிகின்றன. (ந-14-36)

## இந்தியாவில் விருது பெற்றார் ஸ்ரீதரன்



தமிழ்நாடு காஞ்சிஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல் லூரியில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற திருக்கோயில்கள் வளர்த்த அனைத்துலக தெய்வத் தமிழ் 11ஆவது ஆய்வு மாநாட்டில் ஈழத்து ஆன்மிக எழுத்தாளரும் வில்லிசைக் கலைஞருமான இராசையா ஸ்ரீதரனுக்கு "தெய்வத்தமிழ்ச் சுடர்" விருது வழங்கப்பெற்றிருக்கிறது.

''ஈழத்துத் திருக் கோயில்களில் தெய்வத் தமிழ்க் கலையாம் வில்லிசைக் கலை'' என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையை இவர் இம்மாநாட்டில் சமர்ப்பித்தமையால் இவருக்கு இப்பட்டம் வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரை மாநாட்டு மலரி லும் பிரசுரமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆவணப் பட தயாரிப்பு குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.3

ஆசிய திரைப்பட மையத்தின் ஏற்பாட்டில் ஆவண மற்றும் குறும்பட தயாரிப்பு குறித்த செயலமர்வு செப்ரெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

சென்னையைச் சேர்ந்த இந்தியத் திரைப்பட இயக்குநரான கே.ஹரிஹரன் செயலமர்வை நடத்தவுள்ளார். நடைபெறவுள்ள 5 நாள் செயலமர்வில் ஆவணப் பட/ குறும்பட தயாரிப்பு குறித்த விரிவுரைகள், படப்பிடிப்புகள், படத்தொகுப்பு மற்றும் திரைப்பட தயாரிப்பு ஒன்று முழுமையாக மேற் கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள ஆசிய திரைப்பட மையம், இல 118, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ என்னும் முகவரியில் அமைந்துள்ளநிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம். (வ)

## விரைவு கணிதப் போட்டி

வடமராட்சி, ஓக. 3

வடமராட்சி வலய, கோட்ட மட்டத்தில் தரம் 2 முதல் தரம் 5 வரை கற்கும் மாணவர்களுக்கான விரைவு கணித, கணிதத்திறன் விருத்திப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையிலும், பருத்தித்துறை கோட்டமட்டப் போட்டி வட இந்து ஆரம்பப் பாடசாலையிலும், மருதங்கேணிக் கோட்ட மட்டப் போட்டி செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையிலும் நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ந-35)

## கதாப் பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஓக.3

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலய அலங்காரத் திருவிழாவில் நான்காம் திருவிழாவான இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு 'சிறுத்தொண்டர்' கதாப் பிரசங்கம் நடைபெறவுள்ளது.

கதாப் பிரசங்கத்தை கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்துவார்.(ந)

## சாவகச்சேரியில் மூன்று வீடுகளில் திருட்டு

தென்மராட்சி, ஓக. 3

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இரண்டு இடங்களில் அமைந்துள்ள மூன்று வீடுகளில் திருட்டுப் போயுள் ளன.


பெரிய அரசடி வீதியில் இரு வீடுகளில் வீட்டின் சிமெந்து கிறில்களை அப்புறப்படுத்தி உள்நுழைந்த திருடர்கள் ஒரு வீட்டில் வெளிநாட்டு டொலர்கள் உட்பட இரண்டு லட்சம் ரூபா பணமும் மற்றொரு வீட்டில் கைப்பையில் வைக்கப்பட்டிருந்த பணம் உட்பட பெறுமதிமிக்க பொருள்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

மற்றொரு வீட்டில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களால் கொண்டு வரப்பட்டு கழுவ[illegible]லரப் போட்டிருந்த புடைவைகளும் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



## மஞ்சவனப்பதி முருகனுக்கு இன்று கொடி



இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் கொக்குவில் மஞ்சவனப் பதி முருகப் பெருமானின் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு, (இக் கவிதை பிரசுரமாகிறது)

**தஞ்சமென அவனடியை நாடு**

மஞ்சவனப்பதியில் மயிலேறி விளையாடும்
குஞ்சரி மணாளன் பதம்நாடு- அவன்
கூர்வேலைப் புகழ்ந்து கொண்டாடு
சூரரை வதைத்தவனைச் சூழும் வினை தீர்ப்பவனை
நாளும் எமைக் காப்பவனை நாடு-வேலன்
ஆலயத்தில் அனுதினமும் கூடு
வள்ளி தெய்வயானையை வலமிடமாய்க் கொண்டவனை
புள்ளி மயில் வாகனனைத் தேடு-அந்த
வெள்ளி வேலாயுதனைப் பாடு
கந்தப்பெருமானைப்பாடு காவடி எடுத்து வந்து ஆடு
மஞ்சவனப் பதியானைப்பாடு
தஞ்சமென அவனடியை நாடு

-கந்தபேரின்பம்-

## பஸ்கள் ஏற்றாததால் கல் வீசித் தாக்குதல் கனகராயன்குளம் புதூர் சந்தியில் சம்பவம்

மாங்குளம், ஓக. 3
நீண்ட நேரமாகக் காத்திருந்த போதும் பஸ்கள் எவையும் தம்மை ஏற்றிச் செல்லாததால் விரக்தி அடைந்த பாடசாலை மாணவர்கள் பஸ் ஒன்றைக் கல் வீசித் தாக்கியதில் பயணி ஒருவரின் நெற்றியில் காயம் ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று கன கராயன்குளம் புதூர் சந்தி யில் இடம்பெற்றது. வவுனி யாவில் இருந்து பருத்தித் துறை நோக்கிச் சென்ற பஸ்ஸே தாக்குதலுக்கு உள்ளாகியது.
இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;
கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனும், தரம் 7,4 ஆகிய வற்றில் கல்வி கற்கும் இரண்டு மாணவிகளும் பாடசாலைக் குச் செல்லும் பொருட்டு நீண்ட நேரமாக புதூர்ச் சந்தியில் காத்து நின்றுள்ளனர். நேற்று பாடசாலைகளின் இரண்டா வது தவணையின் இறுதி நாள் என்பதால் தமது தேர்ச்சி அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை யில் இந்த மாணவர்கள் இருந்தனர்.
ஆனால் அந்த வழியே சென்ற பஸ் எதுவுமே இவர்களை ஏற்றிச் செல்லவில்லை. நேரம் ஆக, ஆகப் பொறுமை இழந்த இந்த மாணவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப் பட்டதாகத் தெரிய வருகின் றது. அப்போது வவுனியாவி லிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பஸ் வந்தது. ஆனால் அதுவும் மாணவர்களை ஏற்ற வில்லை. அப்போது இந்த மூன்று மாணவர்களும் கற்களினால் எறிந்து பஸ் சைத் தாக்கினார்கள். இதன் போது யன்னல் அருகில் அமர்ந் திருந்த சுமார் 30 வயதான பயணியொரு வருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது.
இதையடுத்து தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்களைப் பொலிஸில் ஒப்படைப்பதற் கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்ட போதிலும் அந்த பஸ்ஸில் பயணித்த கன கராயன்குளம் மகா வித்தி யாலயத்தில் பணிபுரியும் ஆசிரியை ஒருவரின் மனி தாபிமானத் தலையீட்டினால் அது கைவிடப்பட்டதாகத் தெரிய வருகின்றது.
காயமடைந்த பயணிக்கு மாங்குளம் மருத்துவமனை யில் சிகிச்சை வழங்கப்பட்டது.
இதேவேளை இந்த வழித் தடத்தில் பயணிக்கும் பஸ் கள் பாடசாலை மாணவர் களை ஏற்றிச் செல்வதில்லை யென்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.
மாங்குளம் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரியும் வீதி களில் காத்திருக்கும் மாண வர்களை பஸ்கள் தவறாது ஏற்றிச் செல்ல வேண்டுமென வற்புறுத்திக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-422)

### பூவரசு பாடசாலைக்குரிய
# காணியை மீட்கும் முயற்சிகள் தீவிரம்

வவுனியா, ஒக.3
வவுனியா பூவரசங்குளத்தில் இயங்கி வரும் பூவரசு ஆரம்பப் பாடசா லைக்குரிய காணியை விசேட அதிரடிப் படையினரின் பாவனை யில் இருந்து விடுவிப்பதற்கான முயற்சியில் பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தினர் தீவிரமாக ஈடுபட் டுள்ளதாகத் தெரிய வருகின்றது.
இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்தக் காணியில் கட்டடம், கிணறு என்பனவும் அமைந்துள்ளன. பூவரசங் குளத்தின் ஆரம்பப் பிரிவு இந்தக் காணியில் இயங்கி வந்தது. தற்போது விசேட அதிரடிப்படை யினர் இங்கு முகாமிட்டுள்ளனர். அண்மையில் காணி ஆணையா ளர் நாயகம் இந்தக் காணியை விசேட அதிரடிப்படையினரிடம் ஒப் படைக்குமாறு பிரதேச செயல ருக்கு அறிவுறுத்தல் ஒன்றை விடுத்ததால் பாடசாலைச் சமூகத் தினர் கடும் அதிருப்தி அடைந்த னர். மேலும் பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தினர் மேற்கொண்ட தீவிர முயற்சி காரணமாகக் காணியை ஒப்படைக்கும் செயற்பாடு தற் காலிகமாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.
இந்த நிலையில் யுனிசெப் நிறு வனத்தினர் பூவரசு ஆரம்பப் பாட சாலைக்கு கட்டடம் ஒன்றை அமைத்து வழங்குவதற்கு முன் வந்துள்ள போதிலும் அதிரடிப் படையினர் பாடசாலைக் காணியை விட்டு அகலாததால் அதற்கும் தடை ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.
ஆயிரம் பாடசாலைகளை அபி விருத்தி செய்யும் திட்டத்தில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும் உள் வாங்கப்பட்டுள்ளதால் அதன் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்க வேண்டுமென்பதுடன் அதிபர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.
சுமார் 135 மாணவர்கள் கல்வி கற்கும் இந்த ஆரம் பப் பாடசாலை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பூவரசங்குளம் மகாவித்தியாலய வளாகத்தில் தற்போது இயங்கி வருகின்றது.
எனவே அதிரடிப்படையினருக்கு மாற்றுக் காணி யொன்றை வழங்கி விட்டு பாடசாலைக்குரிய காணியை மீள ஒப்படைக்குமாறு பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க)

## வீட்டை இழந்த சிறார்களின் குடும்பத்துக்கு நிதியுதவி



அக்கராயன், ஒக. 3
தீயினால் வீடு எரிந்து சேதமடைந் ததால் நிர்க்கதியான நிலையிலுள்ள முன்பள்ளிச் சிறார்களின் குடும்பத் துக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
அக்கராயன் வைகறை முன்பள்ளி யில் கல்வி பயிலும் இரு சிறார் களின் வீடு தீயினால் எரிந்து நாச மாகியது. இதனையறிந்த உலக தரிசனம் நிறுவனம் அதன் கிளி நொச்சிப் பணிமனையைச் சேர்ந்த ஊழியர்களிடம் சேகரித்த நிதியை அந்த நிறுவனத்தின் மாவட்ட முன் பள்ளி போசாக்கு அலுவலர் எஸ். கனகராஜா பாதிக்கப்பட்ட குடும்பத் தினரிடம் வழங்கினார். (க-18)

### வருடாந்த மஹோற்சவம்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத் தின் வருடாந்த மகோற்சவப் பெருந் திருவிழா ஆரம்பமாகவுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பழைமைவாய்ந்த கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத் தின் இந்த ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண் பகல் 12 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங் கள் இடம்பெறவுள்ளது. (க-6)

## இராணுவத்தில் இணைப்பதற்கான அறிவித்தல்

நெளுக்குளம், ஒக. 3
வவுனியாவில் இளைஞர் யுவதி களை இராணுவத்தில் புதிதாக இணைத்துக் கொள்வதற்கான அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட் டுள்ளன.
வவுனியா மாவட்டத்தின் பல கிரா மங்களிலும் இந்த அறிவித்தலைத் தாங்கிய சுவரொட்டிகள் காணப் படுகின்றன.
இந்தச் சுவரொட்டிகளில் இராணு வத்தில் இணைந்து கொள்பவர் களுக்கு வழங்கப்படுகின்ற சலுகை கள், கொடுப்பனவுகள் தொடர்பாக விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாகாண சபைத் தேர்தல் நடை பெறவிருக்கும் வேளையில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (க-421)

## தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா





மன்னார், ஒக.3
தனிநாயகம் அடிகளாரின் நூற் றாண்டு விழாவை முன்னிட்டு மன் னார் தமிழ்ச் சங்கம் மன்னாரில் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் விழாவின் முதல் நாள் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றன.
தொடக்க விழா, இலக்கிய அரங்கு, கலை அரங்கு என மூன்று அரங் குகளாக முதல் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.
'பேராசிரியர் சு. வித்தியானந்தன்' அரங்கு எனப் பெயரிடப்பட்ட அரங் கில் மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் காலை 9மணிக்கு தொடக்க விழா நிகழ்வு கள் ஆரம்பமாகின.
மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆரம்பமான ஊர்வலத் துடன் இவ்விழா தொடக்கி வைக் கப்பட்டது. ஊர்வலம் ஆரம்பமாவ தற்கு முன்னர் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைக் கப்பட்டுள்ள தனிநாயகம் அடிக ளாரின் உருவச் சிலை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை யினால் திறந்து வைக்கப்பட்டது.
தொடக்க விழாவில் சிறப்பு விருந் தினர்களாக மன்னார் நகர பிதா திரு. எஸ். ஞானப்பிரகாசம், வவு னியா மேலதிக அரச அதிபர் திரு மதி ச. மோகநாதன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு மதி மாலினி வெனிற்றன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.
கௌரவ விருந்தினர்களாக யாழ்ப் பாணம் அமதிகள் முதல்வர் இல் லப் பொறுப்பாளர் அருட்திரு. ஜெறோம் லெம்பேட், மலையகத் தின் மூத்த எழுத்தாளர் அந்தனி ஜீவா, திருகோணமலையின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.
சர்வமதத் தலைவர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவில் இறைவணக்கம், மங்கள இசை ஆகியவற்றைத் தொடர்ந்து மன்னார் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திரு மதி பெப்பி விக்ரர் லெம்பேட் வர வேற்புரையை நிகழ்த்தினார்.
இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றத் தின் குழந்தைக் கலைஞர்கள் வழங் கிய 'யார் குழந்தை' என்ற நாட்டுக் கூத்து நாடகம் இடம்பெற்றது.
'தமிழாழி' என்ற பெயரில் நூற் றாண்டு விழா மலரும் வெளியிடப் பட்டது. பாடசாலை மாணவ மாண வர்களின் நடன நாட்டிய நிகழ்வு களும் அங்கு இடம்பெற்றன. மன் னார் தமிழ்ச் சங்க நிர்வாகச் செய லாளர் மன்னார் அமுதன் நன்றியு ரையை வழங்கினார். (க-12)

## மன்னார் மாவட்டத்தில் ஊடகவியலாளர் போட்டி

வவுனியா, ஒக.3
எதிர்வரும் வடமாகாண சபை தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக பிராந்திய ஊடகவியலாளர் அப் துல் சமீம் முஹம்மது பஸ்மி என்ப வர் போட்டியிடுகின்றார்.
வடமாகாண சபை தேர்தலில் மன் னார் மாவட்டத்தில் போட்டியிடுவ தற்கான வேட்பு மனுவை ஐக்கிய தேசியக்கட்சி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மு.ப. 10.51 மணியளவில் தாக்கல் செய் துள்ளது.
ஐக்கிய தேசியக்கட்சியின் மன்னார் மாவட்ட தலைமை வேட்பாளரும், ஊடகவியலாளருமான அப்துல் சமீம் முஹம்மது பஸ்மி தலைமை யில் இந்த வேட்பு மனுத்தாக்கல் இடம் பெற்றது.
இதன் போது ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான சின்னத்தம்பி பொன்னையா உட்பட பலர் கலந்து கொண்டனர்.
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மன்னார் மாவட்டத்தில் 12 கட்சிகளும்,8 சுயேட்சைக் குழுக்களும் என மொத்தமாக 20 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இதில் எந்த வேட்பு மனுவும் நிரா கரிக்கப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (க-12)

# பேரா சண்முகலிங்கனுக்கு கனடாவில் சிறப்பு விருது

யாழ்ப்பாணம், ஓக.3



2013 ஆம் ஆண்டுக்கான கனடா உதயன் சர்வதேச சிறப்பு விருது பேராசிரியர் நா. சண்முகலிங்கனுக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்த 3 தசாப்தங்களாக பல்கலைக்கழகத்தின் சமூக வியல்துறையில் அதன் மேம்பாட்டுக்காகப் பணியாற்றிய இவர் சமூகவியல் துறையின் உதவி விரிவுரையாளராகவும், யாழ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும், கொழும்பு பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டதாரியும் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச பீதியில் பல விருதுகளையும் பெற்றுள்ளார். அத்துடன் கல்விசார் பங் களிப்புக்கு அப்பால் கலை இலக்கியப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

இதனை விட சமூக நோக்குடன் தனது தாய், தந்தையர் நினைவாக நாகலிங்கம் நூலாலயம், நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் என்பவற்றையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இவரது வாழ் நாள் காலத்தில் ஆற்றிய பணிகளைக் கௌரவப்படுத்துவ தற்காக இந்த வருட கனடா உதயன் சர்வதேச சிறப்பு விருது இவருக்கு வழங்கப்படவுள்ளது. (வ-14)

# தேசிய மட்டத்தில் வற்றாப்பளை ம.விக்கு முதலாவது இடம்

### சிறப்பாக இடம்பெற்றது பாராட்டு விழா

நெடுங்கேணி, ஓக. 3

தேசிய மட்டத்தில் நாட்டார் பாடல் நிகழ்ச்சியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.*

வற்றாப்பளை மகா வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் ந.இரங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இந்தப் பாராட்டு விழா நிகழ்வு ஆரம்பமாகியது.

இதன்போது மாணவர்களான சி.மயூரன், அ.அஜித்திரா, பா.கீர்த்தனா, த.சுதர்சினி,இ.விதுர்சிகா, மே.விதுசனா ஆகியோர் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் சீ.ஏ.மோகன்றாஸ் இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட தோடு மாணவர்களுக்கு பதக் கங்களையும், சான்றிதழ் களையும் வழங்கினார்.

மேலும் மாணவர்களால் விழா மேண்டயில் முதலாம் இடத்தைப் பெற்ற நாட்டார் பாடல் பாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# தேர்வு நடந்தும் நியமனம் இல்லை

யாழ்ப்பாணம், ஓக.3

ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்துக்கான நேர்முகத் தேர்வு யாழ் வலயத்தால் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்றும் தெரிவு செய்யப்பட்டவருக்கான நியமனம் இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஆசிரிய ஆலோசகரே தற்சமயம் குறிப்பிட்ட பணியை மேற்கொண்டு வரும் நிலையில் அவருக்கான நியமனக் கடிதம் இதுவரை வழங்கப்படவில்லை.

ஒரு வருடம் கடந்தும் யாழ்ப்பாண வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாமல் இருப்பதற்கு, தமிழர் ஆசிரியர் சங்கத் தலையீடும் ஒரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது கடந்த 2012 இல் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-7)



பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையின் மாணவிகள் தேசிய மட்ட ஹொக்கிப் போட்டியில் பங்கு பற்றியபோது அவர்களுக்கு அன்பளிப்பாக 12 காற் காப்பு மட்டைகளை (சிங்கார்ட்) 'எனேர்ஜி நெற்' நிறுவனத்தினர் கல்லூரி அதிபரிடம் கையளித்தனர். (ஒ)

# பேச்சுப்போட்டி

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவினால் பேச்சுப்போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்.

10-15 வயது வரை பிரிவு ஒன்றாகவும், 16-21 வயது வரை பிரிவு 2 ஆகவும் கொண்டு போட்டிகள் நடத்தப்படும். எமது கலாசாரத்தை மையமாகக் கொண்டு 15 நிமிடங்களுக்கு உட்பட்டதாக பேச்சு அமையவேண்டும். போட்டி யில் பங்கு பற்ற விரும்புவோர் 021-222 2275, 2335 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். (ந)

# செஞ்சிலுவையின் வலி.வடக்கு தொண்டர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 3

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குப் பிரிவு கிளையின் தொண்டர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகத்தில் உள்ள கிளை அலுவலகத்தில் நடைபெறும். மாவிட்டபுரம், கீரிமலை, நல்லூர் ஆலயங்களில் நடைபெறும் உற்சவ வேளையில் மேற்கொள்ளப்படவுள்ள முதலுதவிச் செயற்பாடுகள் தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் பிரிவின் தொண்டர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரசு விடயங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**இடபம்:** பொறுமையை இழப்பீர்கள். முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப்பேச வேண்டாம்.

**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். பணப்பற்றாக் குறையைச் சமாளிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**கடகம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**கன்னி:** யதார்த்தமாகப்பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

நாளை

*ஆடி-19 ஞாயிற்றுக்கிழமை 04.08.2013*
*திதி: திரயோதசி பி.இ. 12.32 வரை*
*நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 04.16 வரை*
*சுபநேரம்: 09.04 - 10.34 வரை*
*இராகுகாலம்: 04.34 - 06.04 வரை*

**துலாம்:** வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிறு சிறு அவமானங்கள் ஏற்படக்கூடும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**தனுசு:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**மகரம்:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர் களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 2 | | | 3 | 4 | |
| | 3 | | | | 8 | | 9 | 5 |
| 7 | 9 | | | 3 | 4 | | 6 | |
| 6 | 2 | 4 | | 7 | | 9 | | |
| | | | | | | | | |
| | | 8 | | 4 | | 2 | 3 | 6 |
| | 4 | | 3 | 1 | | | 8 | 9 |
| 9 | 5 | | 6 | | | | 2 | |
| | 8 | 6 | | | 2 | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 6 | 1 | 8 | 4 | 3 | 5 |
| 8 | 6 | 3 | 9 | 4 | 5 | 2 | 1 | 7 |
| 5 | 1 | 4 | 2 | 3 | 7 | 9 | 6 | 8 |
| 2 | 7 | 6 | 4 | 8 | 1 | 3 | 5 | 9 |
| 9 | 4 | 5 | 3 | 7 | 6 | 1 | 8 | 2 |
| 1 | 3 | 8 | 5 | 2 | 9 | 6 | 7 | 4 |
| 6 | 9 | 7 | 1 | 5 | 2 | 8 | 4 | 3 |
| 4 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 6 |
| 3 | 8 | 2 | 7 | 6 | 4 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## வெளியேற்றப்பட்ட குடும்பத்தாரிடம் திறப்பு

# பிணையில் விடுதலையானார் பெண்

யாழ்ப்பாணம், ஓக.3

வீட்டில் இருந்து அடாவடியாக வெளியேற்றப்பட்ட குடும்பத்தாரை அதே வீட்டிலேயே தங்கியிருக்குமாறு யாழ். நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டது. அத்துடன் வெளிநாட்டில் இருந்து வந்து அபாவடியில் ஈடுபட்ட பெண்ணைப் பிணையில் விடுதலை செய்தது மன்று.

ஆனைக்கோட்டை பொன்னையா வீதி, ஆறுகால் மடம் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி மதியம், வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பொலிஸாரின் துணையுடன் வீட்டில் இருந்த உடைமைகளை அள்ளிவீசி வீட்டில் இருந்த நபர்களை அடாத்தாக வெளியேற்றியிருந்தனர் எனக் குற்றச்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டில் தங்கியிருந்த நபர் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மறுநாள் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை வெளியேற்றப்பட்ட குடும்பத்தாரை அதே வீட்டில் குடியிருக்குமாறு யாழ். நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது. நீதிமன்றில் அறிவித்தலை ஒட்டச் சென்ற நீதி மன்ற உத்தியோகத்தர்களை அறிவித்தல் ஒட்ட விடாமல் வெளிநாட்டில் இருந்த வந்த பெண் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் வெளியேற்றப்பட்ட குடும்பத்தார் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் யாழ். நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நகர்தல் பத்திரம் சமர்ப்பித்தார். அதையடுத்து வெளியேற்றப்பட்ட குடும்பத்தாரை அதே வீட்டில் குடியமர்த்துமாறு நீதிமன்று உத்தரவிட்டு வீட்டின் திறப்பையும் மன்றில் வைத்து குடும்பத்தினரிடம் ஒப்படைத்தது. (ந-14-4)

## வீதியில் பெருங்குடி கள் தள்ளாட்டம்

# குறுக்கே சைக்கிள், மோ.சைக்கிள்

### நாளாந்தம் போக்குவரத்தில் சிரமம்

யாழ்ப்பாணம், ஓக.3

புத்தூர்ப் பகுதியில்- பருத்தித்துறை வீதியில் சன நடமாட்டம் மிகுந்த இடத்தில் பெருங்-குடிமக்கள் தலைகால் புரியாமல் நடந்து கொள்கின்றனர். இதனால் இந்த வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்தித்து வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு முன்னால் மதுப் பிரியர்கள் ஒன்று கூடி மதுவை அருந்திவிட்டு கும்மாளம் போடுகின்றனர்.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை வீதியில் தாங்கள் நினைத்தவாறு அங்கும் இங்குமாக செலுத்தி போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகின்றனர்.

மூக்குமுட்ட குடித்துவிட்டு நிறைபோதையில் ஒன்று கூடி நிற்கும் அவர்களிடம் தட்டிக் கேட்க அஞ்சி பொது மக்கள் விலகிச் செல்கின்றனர். பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்படுவதால் அடிக்கடி விபத்துக்களும் நடைபெறுகின்றன.

இந்தப் பகுதியில் வைத்திய சாலை, தேவாலயம், பாடசாலை என்பன அமைந்திருப்பதால் நாளாந்தம் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மதுப்பிரியர்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)

# மறுக்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஓக.3

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், பொன்னையா வீதியிலுள்ள வீட்டிலிருந்தவர்களைப் பொலிஸார் வெளியேற்றி பொருள்களையும் வெளியே வீசி அடாவடியில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்டவர்கள், சம்பவ இடத்தில் நின்றிருந்த அயலவர்கள் தெரிவித்துள்ள நிலையில், பொலிஸார் அவ்வாறு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பெண் ஒருவரே பொலிஸார் மூலமாக குறித்த வீட்டிலிருந்தவர்களை வெளியேற்றி, வீட்டிலிருந்த பொருள்களையும் எடுத்து வெளியே வீசியிருந்தார். பொலிஸார் அவ்வாறு வெளியே வீசியபோது குடும்பத்தவர்களும் அங்கு கூடிய அயலவர்களும் தடுத்தனர். அதனைக் கருத்தில் கொள்ளாது பொலிஸார் செயற்பட்டனர் என்று சம்பவ இடத்தில் பொலிஸாரின் அடாவடியைப் பார்த்துக் கொண்டிருந் தவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குடும்பத்தலைவர் தனது நண்பனுடன் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தபோது இருவரையும் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர் பொலிஸார் அவர்கள் மறுநாள் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் செய்தியாளர் கேட்டபோதே பொலிஸார் அவ்வாறு செய்யவில்லை என்று ஜெப்றி பதிலளித்தார்.

அந்தப் பிரச்சினை தொடர்பில் இரண்டு தரப்பினரும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் குறித்த வீட்டிலிருந்தவர்களை வெளியேற்றவில்லை பொருள்களை வெளியே வீசவுமில்லை''என்று கூறினார் ஜெப்றி.(வ-4)

# ரூ.10 ஆயிரம் பெறுமதியான ஆட்டுக்கு 25,000 பிணைமுறி

தென்மராட்சி, ஓக.3

வழக்கொன்றின் சான்றுப் பொருளாக ஒப்படைக்கப்பட்ட ஆட்டினை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணை முறியில் கொண்டு செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

பதினைந்து தினங்களுக்கு முன்னர் கைதடி மேற்கில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டது. இது தொடர்பாக ஆட்டின் ஊரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை அதே தினத்தில் அடைக்கப்பட்ட வாகனம் ஒன்றில் ஆடு கொண்டு சென்ற வேளை பொலிஸாரிடம் பிடிபட்ட மூவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் மிருகவதைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றினால் மூவரையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

காணமல் போன ஆடு பொலிஸ் நிலையத்தில் நிற்பதை அறிந்த உரிமையாளர் அங்கு சென்று ஆட்டைப்பார்த்து உறுதிப்படுத்தி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து பொலிஸார் ஆட்டினையும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் ஆட்டினை வழக்கு முடியும் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டு மெனக் கூறி 25 ஆயிரம் ரூபா பிணை முறியில் கொண்டு செல்ல அனுமதித்தார். வழக்குடன் தொடர்புடைய 3 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லவும் உத்தரவிட்டார். (ந-9)



வவுனியா வடக்கில் உள்ள பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து வருகை தந்த வைத்தியர்களால் தெரு நாய்களுக்கான இலவச கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இதன்போது நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன் குளம் போன்ற பகுதிகளில் 100 இற்கு மேற்பட்ட பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (எ-435)

# மின் விநியோகத்தில் தடை

புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை சரசாலை, மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை சரசாலை, மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர், இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தங்கேணி ஆகிய இடங்களிலும்-

5ஆம் திகதி திங்கட்கிழமை, 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 7 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தினங்களில் சரசாலை, மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆகிய இடங்களிலும்-

8 ஆம் திகதி வியாழக்கிழமை, 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சரசாலை மட்டுவில் பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## போக்குவரத்து பாதுகாப்பு குறித்து நடைபெற்ற கலந்துரையாடல்

வலி. வடக்கு, ஓக.2

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறக்கூடிய விபத்துக்களைக் கட்டுப்படுத்தல், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல், பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான கலந்துரையாடல் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எல்.எக்கநாயக்கா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாட்லில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை, நெல்லியடி, காங்கேசன்துறை, பலாலி, தெல்லிப்பழை, இளவாலை, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், ஏனைய திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய வீதிகளின் நிலைமைகள், வீதிக் குறியீடுகளை போடுதல், மாணவர்களின் போக்குவரத்து ஒழுங்குகள், விபத்துக்களை கட்டுப்படுத்தல் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.(ந-86)






# கைவிடப்பட்ட கிணற்றில் மண்டை ஓடு



திருகோணமலை,ஓக.2

திருகோணமலை- தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட கிணறு ஒன்றை துப்புரவு செய்வதற்காக நீர் இறைக்கப்பட்ட போது மனித மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மனித மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டதையடுத்து கிணற்றில் நீர் அகற்றப்படுவது பொலிஸாரால் நிறுத்தப்பட்டது.

கிணற்றில் மேலும் எச்சங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடு பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், மண்டை ஓட்டை கந்தளாய் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (ச-22)


# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நவீன கதிரியக்க தொழில்நுட்பம்

கொழும்பு,ஓக.3

டெங்கு நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்கான சிகிச்சைகளை முறைப்படுத்தும் நவீன கதிரியக்க தொழில்நுட்ப முன்னெடுக்கும் சுகாதார அமைச்சு வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

சிங்கப்பூர் டெங்கு நோய் நிபுணர்கள் குழுவுடன் சுகா தார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட பேச்சுக்களின் பயனாக டெங்கு வைரஸின் மாற்றங்கள் மற்றும் அதற்கான சிகிச்சைகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வகையில் இந்த நவீன கதிரியக்க தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான விசேட கதிரியக்க தொழில்நுட்ப பரிசோதனைப் பிரிவு கொழும்பு பொரளையிலுள்ள மருத்துவ பரிசோதனை நிறுவ



னத்தில் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தத் தொழில்நுட்பம் டெங்கு தொற்றினை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அது தொடர்பான எச்சரிக்கையை வெளியிட உதவுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்ததுள்ளது.

இந்தத் தொழில் நுட்பத்தின் மூலம் டெங்கு நோயாளியின் இரத்த மாதிரியைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் குறிப்பிட்ட வைரஸ் டெங்கு நோயாக மாறும் அபாயம் குறித்து ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது. அவரது உடலில் எப்போது டெங்கு நோய் ஆரம்பித்தது போன்ற விடயங்களையும் கண்டறிய முடியும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் திட்டம் பல சர்வதேச நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் இலங்கையில் ஐந்தாண்டு திட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தம்பிப்பிள்ளை துரைசிங்கம் (டிங்கர்)
தோற்றம்: 02.02.1947 மறைவு: 14.08.2012
திதி:- 03.08.2013
எங்களுக்கு உயிர்தந்த அப்பாவே!
மெழுகுதிரிபோல் உங்களை உருக்கி
ஒளியை எங்களுக்குத் தந்துவிட்ட அப்பாவே!!
அன்பு, பாசம், அரவணைப்பு எங்கள் வாழ்க்கைக்குத்
தேவையான எல்லாவற்றையும் தந்துவிட்டு கடைசியில்
வேதனையும் கண்ணீரும் தந்தது எதற்கு? திரும்பவும்
எங்களுக்கு அப்பாவாகக் கிடைப்பீர்கள் என்பதற்காகவா?
அப்பா நீங்கள் எமக்கு வேணுமப்பா எங்கள்
கண்ணீரை உங்கள் கை கொண்டு துடைக்க
வாருங்கள் அப்பாவே!
என்றும் நினைவில்
தியாகராஜா வீதி,
சண்டிலிப்பாய்.
குடும்பத்தினர்.
(30161)(2.3.6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

30.06.2013 அன்று கனடாவில் காலமாகிய
அமரர் முருகேசு தணிகாசலம்
அவர்களின் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனைகளும் இன்று (03.08.2013)
சனிக்கிழமை நயினாதீவில் நடைபெறும்.
எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம் மனதைவிட்டு அகலவில்லை
உங்களை அன்புடன் நினைவு கூரும்
3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
குடும்பத்தினர்.
(30129)(45.6.3)

41 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்
அமரர் யோகராஜா ஸ்ரீகாந்
மலர்வு
09.05.1981
உதிர்வு
25.06.2013

கடந்த 25.06.2013 அன்று இறைபதமடைந்த எனது
குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும்,
தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும்
எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,
இன்று (03.08.2013) சனிக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில்
நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (04.08.2013)
ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய
நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.
தயவுகூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்
சிந்துஜா - ஸ்ரீகாந் (மனைவி)
இல. 33, 2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை வீதி,
சண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# சீனாவின் பெற்றோலின் தரத்தில் சந்தேகம்

## இரண்டாம் முறையும் பரிசோதனைக்கு

கொழும்பு,ஓக. 3
சீனாவின் பெற்றோசைனா நிறுவனத்தில் இருந்து இலங்கைக்கு எடுத்து வரப் பட்டுள்ள 35,000 மெற்றிக் தொன் பெற்றோலின் மாதிரி முதல் தடவையாகப் பரிசீலணைக்கு உள் ளாக்கப்பட்டபோது, அதன் ஒக்ரேன் பெறு மதி நிர்ணயிக்கப் பட்டுள்ள தரத்துக்குச் சமமானதாக இல்லா திருப்பது கண்டறி யப்பட்டது.

அதனால் அந்த எரி பொருளின் மாதி ரியை இரண்டா வது தடவையாகவும் பரி சோதிப்பதற்கு இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாப னம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எரிபொருளுடன் வந்த கப்பல் கடந்த 29 ஆம் திகதி கொழும் புத் துறைமுகத்தை வந்தடைந்ததை அந்த எரிபொருள் தொகையில் இருந்து பெறப்பட்ட மாதிரி, அடிப்படைப் பரிசோ தனைக்கு உள்ளாக் கப்பட்டபோது அவற் றின் ஒக்ரேன் பெறு மதி நிர்ணயிக்கப் பட்ட தரத்தில் இல்லா திருப் பது கண்டறி யப்பட்டது.

அதன் பின்னர் இரண் டாம் முறையாகவும் மாதிரிகள் பெறப் பட்டு தற்போது சபு கஸ்கந்தையில் உள்ள பரிசோதனைக் கூடங்களில் பரி சோதனைக்கு உள் ளாக்கப்பட்டு வருவ தாக பெற்றோலி யக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை யில் அந்த எரி பொருள் மாதிரிகள் தரநிர்ணயங்களுடன் பொருந்தாது போகு மானால் எரிபொ ருள்களைக் தரையி றக்குவதற்கு அனு மதி வழங்கப்பட மாட்டாது என்று கூட் டுத் தாபனம் சுட் டிக்காட்டியுள்ளது.

இந்த எரிபொருளை விநியோகித்துள்ள பெற்றோசைனா நிறுவனமானது, பெற்றோலியக் கூட் டுத்தா பனத்துடன் நீண்டகால ஒப்பந் தங்களை மேற் கொண்டுவரும் நிறு வன மாகும் என்று கூட்டுத் தாபனம் கூறியுள்ளது.

இந்த 35,000 மெற் றிக் தொன் பெற் றோலை திருப்பிவிட வேண்டி நேர்ந்தா லும், நாட்டுக்குத் தேவையான பெற் றோல் கைவசம் உள்ளது என்று கூட் டுத்தாபனம் குறிப் பிட்டுள்ளது. (ச-22)

## காணவில்லை



சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த
23 வயதுடைய
**நித்தியானந்தன்**
**சுகிர்தா (காந்தரூபன்)**
என்பவரை 03.05.2013
அன்றிலிருந்து காணவில்லை.
கண்டவர்கள் கீழ்க்கண்ட
இலக்கத்துக்கு அறியத்தரவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
**தொடர்பு**
**077 651 2295**

(30147 )(6,2,3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை கனகசபை

*(பொன்னம்மா ரீச்சர், இளைப்பாறிய அதிபர்)*



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு இல.31, கோயில் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட அன்னப்பிள்ளை கனகசபை (01.08.2013) வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் கனகசபை (இளைப் பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர் களான கார்த்திகேசு-பொன்னம்மா தம் பதியரின் மருமகளும், தர்மசீலன் (மது வரி அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), ஞானசீலன் (லண்டன்), ரூபிகா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனலட்சுமி, சாருலதா (லண்டன்), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், தேனுகா (A/L கணிதப்பிரிவு, வேம்படி மகளிர் கல்லூரி), ஜெஸ்நிலா, பிருந்தன், பிருந்தா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, தர்மலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் செல்லம்மா (கனடா), நற்குணராசா (பிரான்ஸ்), சிவக்கொழுந்து (கனடா), இராசேந்திரம் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் இந்திராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை) குகபாலன் (பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம், புவியியல் துறை), லோகநாதன் (ஜேர்மனி), திரு நாவுக்கரசு (அதிபர், மலைமகள் வித்தியாலயம், ஹற்றன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு: 077 540 2816
31, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
**க.தர்மசீலன் (மகன்)**
**மதுவரி அத்தியட்சகர்**

(30162)(3.6.11)

### திருமதி தவமணி நவரட்ணசிங்கம்



அச்செழுவைப் பிறப்பிடமாக வும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி நவரட்ண சிங்கம் 29.07.2013 திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வினாசித்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சிதம்பரநா தர்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர் களின் அன்பு மனைவியும், வரத ராஜன், வசந்தகுமாரன், வதனி, வதனன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவானி, கிரிஷா (செல்வி), ஜெய றஞ்சித், சுபலதா (ராணி), தயாபாரன், சிறிதரன், சாந்தினி, தேவி, பகீரதன், திவாகரன், சிவகாந்தன், மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், சதாசிவம், சச்சிதானந்தம் மற்றும் கனகமணி, பேரானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருசன், விஷ்ணுஜன், சபீசன், தாட்சாயினி, அர்ச்சனன், ஜெருஷா, றனுஷா, மயூரிக்கா, ஜதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் லண்டனில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காரைலர் வளவு,**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**
வரதன் (பிரான்ஸ்) - 33130303790
வசந்தன் (லண்டன்) - 442085998653
வதனி (அவுஸ்திரேலியா)-44304474314
வதனன் (லண்டன்) - 442084665953

தகவல்:
**குடும்பத்தினர்.**

(37672) (10,6,3)

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் நாகராஜா

(முன்னைநாள் தபால் அதிபர்-வவுனியா, முன்னைநாள்கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்-வவுனியா)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிட மாகவும், வவுனியா, இந்தியா ஆகிய இடங் களை வசிப்பிடமாகவும், கனடாவை வதி விடமாகவும் கொண்ட கனகரத்தினம் நாக ராஜா 24-07-2013 புதன்கிழமை கோண்டா விலில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனக ரத்தினம்-பொன்னம்மா தம்பதிகளின் புத்தி ரனும், அம்பலவாணர்-செல்லாச்சி தம்பதி களின் மருமகனும், காலஞ்சென்ற நேசரத் தினம்மா அவர்களின் ஆருயிர்க் கணவரும், அகிலன் ·(ஜெயா-Jeya and Brothers), பால முரளி (பாலன்-Balan Mortgage), பாஸ்கரன் (Nesam Records), பரிமளாதேவி, நளினி (Ma Serigraphie Action Print -France), சுதா ஆகி யோரின் அன்புத் தந்தையும், சீலா, சசிரேகா, அஞ்சலா ஜெயந்தினி, காலஞ்சென்ற அலன் (France), C.K.செந்தூரன்(Golden Star Banquet) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், தனூஜா, சாருகன், கேசினி, அர்வின், அடலீன், எட்வின், அசாந்தி, ஏகன், கோகுலன், கார்த்திக், அஸ்வினியா, கானுயன், சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னராசா (முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் -மன்னார், வவுனியா, முல்லைத்தீவு), கிருபானந்தம்(முன்னாள் விரிவுரை யாளர் தொழில் நுட்பக் கல்லூரி- கொக்குவில், கலைமகள் புத்தகசாலை), பராசக்தி, கமலாதேவி, மகேசன், (முருகன் புத்தகசாலை - கனடா), சதா னந்தன், சற்குணநாதன் (குணம் வீடியோ- யாழ்ப்பாணம்), கிருஸ்ணா னந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Aug 3rd, 2013 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை 8911 Woodbine Ave, Markham (Woodbine/HW7) Chapel Ridge Home இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, Aug, 4th, 2013 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மு.ப. 11.30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, Elgin Mills Cemetery (கனடா) இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அகிலன்(ஜெயா) - கனடா 416 721 5252
பாஸ்கரன் - கனடா 647 739 2478
சுதா - கனடா 416 400 8583
பாலமுரளி(பாலன்) - கனடா 416 727 3843
நளினி - France -Action Print 011 331 4866 0045
பராசக்தி(சகோதரி) - 011 94 77 138 2779

தகவல்:
**பிள்ளைகள்.**

(30155)
(10,6,3)

## மரண அறிவித்தல்

### சிங்காரம் கனகராசா



வல்வெட்டித்துறை, கம்பர்மலையைப் பிறப் பிடமாகவும், வவுனிக் குளம், பாலிநகரை வதி விடமாகவும் கொண்ட சிங் காரம் கனகராசா நேற்று முன்தினம் (01.08.2013) வியாழக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வர்களான சிங்காரம் - கண் மணி தம்பதியரின்பாசமிகு மகனும், காலஞ்சென்றவர் களான செல்லத்துரை - அன்னலட்சுமி தம்பதிய ரின் பாசமிகு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான ஜெயச்சந்திரா, ஜெயலதா மற்றும் ஜெயக் காந் (லண்டன்), ஜெயக் குமார் (லண்டன்), ஜெயச்சந்திரன் (கனடா), ஜெயராசா (லண்டன்) ஆகி யோரின் அன்புத் தந்தையும், பூமணி (பாவற்குளம்), நடராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜீவராணி, பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற வரதகாந்தன் மற்றும் நாகேஸ்வரி (வவுனிக்குளம்), காலஞ்சென்ற அன்னராணி மற்றும் செல்வராணி (வவுனிக்குளம்), தவகாந்தன் (லண்டன்), சிவகாந்தன் (யாழ்ப்பாணம்), மங்களேஸ்வரி (லண்டன்), வில்வரட்ணம் (பாவற்குளம்), ஜெகதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அர்த்தணா, கவித்திக்கா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பாலிநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**20, வீட்டுத்திட்டம்**
**பாலிநகர், வவுனியா.**
குமார் - 077 999 3602,
ஜெகன் - (கனடா - 14164521241)
ராசன் - (பிரித்தானியா - 447404176199)

(35215)(2.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 279 3036**

# முதியோரை ஓய்வுக்கு தயார்ப்படுத்த திட்டம்

## சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 3

ஓய்வுநிலை வாழ்க்கைக்கு முதியோரைத் தயார்படுத்தும் நோக்குடன் அரச, தனியார் துறை சேவைகளில் உள்ள 55 வயதைக் கடந்துள்ள முதியோர்களுக்கு விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

சேவையிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னர் அவர்களை உடல் மற்றும் உளரீதியாக ஓய்வு நிலை வாழ்க்கைக்குத் தயார்படுத்துவது பொருளாதார மற்றும் சமூக ரீதியில் நாட்டின் எதிர்காலத்துக்கு மிக முக்கியமானது என்று மூத்த பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் திருமதி அனுஷா கோகுல தெரிவித்தார்.

இந்தச் செயற்றிட்டம் நாடு முழுவதும் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.



கிராம சேவையாளர் பிரிவில் ஒவ்வொரு ஒரு முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு முதியோருக்கான மத்திய செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)

# தேர்தல் அறிவிப்பின் பின்னர் 23 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.2

வடக்கு மற்றும் மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் மத்திய மாகாணத்திலிருந்து 10 முறைப்பாடுகளும், வடமேல் மாகாணத்திலிருந்து 9 முறைப்பாடுகளும் மற்றும் வடக்கு மாகாணத்திலிருந்து 4 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுவது, இடமாற்றங்கள், வன்முறைச் செயல்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-22)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்...!

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.09.1928 | 27.07.2011 |



### கதிர்காமு கிருஷ்ணபிள்ளை

(ஆசிரியர்)

(முன்னாள் தலைவர்-தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம்)

அறிவினில் சிகரமாய் ஆற்றலில் வல்லோனாய்
ஆதரவு அற்றோர்க்கு என்றென்றும் அன்பனாய்
சமத்துவம் வாழ்ந்திட சளைக்காமல் உழைத்திட்ட
தூயனாய் வீரனாய் வாழ்ந்திட்ட சான்றோனே!

தொண்டைமானாறு. (30170)(10,16,14) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாவிலாள் அந்தோனிப்பிள்ளை

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாவிலாள் அந்தோனிப்பிள்ளை (நேசம்மா) கடந்த 29.07.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற பொலிஸ் மரியநாயகத்தின் பாசமிகு தாயும் றீற்றாவின் அன்பு மாமியும் காமலிற்றாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று சனிக்கிழமை (03.08.2013) பி.ப. 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.70, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி/10398)

தகவல்: ச:வி.ம.றீற்றா புளோறன்ஸ் (மருமகள்)

### மார்க்கண்டு நடராசா



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நடராசா (01.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிவபாக்கியம், சொர்ணம்மா, தியாகராசா, தர்மராசா மற்றும் குலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் ரஞ்சிதமலர், ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் உருத்திரேஸ்வரன் (அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்), மனோகரன் ஆகியோரின் மாமனும் ராகேஸ்வரன், நிரூஜா, பிரதீபன், இந்துஜா (கனடா), ஹம்சினி (NSB யாழ்ப்பாணம்), ஷோபினி (HSBC யாழ்ப்பாணம்), கேசிகா (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெயப்பிரதாப் (டோகா), பிரதீபன், அஷ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.
0771777479 (30171)

தகவல்: குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## சுந்தரம் சரவணபவானந்தன் (அப்பர்)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03.09.1948 | 04.07.2013 |

திதி: ஏகாதசி

பாசத்தின் உறைவிடமாய் அன்பின்
திருவுருவாய் குடும்பத்தின் தலைவனாய்
எங்களை வழிநடத்திய தெய்வமே
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை
விட்டு அகலாது எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து ஆண்டவன் அடியில் உங்கள்
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இன்று (03.08.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(சேர்ச் லேன்)
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(30173)(10,16,14)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வெலிவேரிய தாக்குதல் குறித்து சுயாதீன விசாரணை வேண்டும்

மடைந்துள்ளனர். இதனால் நேற்றுமுன்தினம் முதல் குறித்த பகுதியில் பதற்ற நிலை நிலவிவருகிறது.

இந்நிலையில், வெலிவேரிய பிரதேச மக்களைப் பார்வையிடச் சென்றபோதே எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் குறித்த பகுதிக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் 12 மணிவரை அங்கிருந்து நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது எம்.பிக்களான ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா, அஜித் மான்னப்பெரும, ருவன் விஜேவர்தன, ஐ.தே.கவின் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான செயலாளர் சாகா ரத்நாயக்க ஆகியோரும் சென்றுள்ளனர்.

வெலிவேரிய பகுதிக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க, இராணுவத்தின் உயரதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து சம்பவம் தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையில்,

''வெலிவேரிய பகுதியில் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் அதைக் கலைத்து நிலைமையைச் சுமுகநிலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின், இலங்கைச் சட்டப்படி பாதுகாப்புத் தரப்பினர் பெட்டன் பொல்லுகளை மட்டுமே பாவிக்கமுடியும். ஆனால், இங்கு பட்டன் பொல்லுகள் தவிர்ந்த ஏனைய பொருட்களும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கவேண்டுமாயின், இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கலாம். அப்போது மக்கள் கலைந்துசென்றிருப்பர். ஆனால், இங்கு பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் ஒருவர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளுமளவுக்கு இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கியது யார்? இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை உடன் நடத்தப்படவேண்டும். அத்துடன், இது விவகாரம் தொடர்பில் நான் நாடாளுமன்றில் கேள்வி எழுப்புவேன்'' - எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின்போது கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான சட்ட ரீதியிலான உதவிகளை வழங்க ஜோன் அமரதுங்க, அஜித் மான்னப்பெரும ஆகிய எம்.பிக்களையும் நியமித்துள்ளார்.

# ஆசியாவிலேயே அதிகளவு இராணுவம் நிலைகொண்டுள்ள பிரதேசமாக வடக்கு

அது பொருள்களை விற்பனை செய்வது முதல் பாதுகாப்பு உட்பட பல விடயங்களில் நீண்டு செல்கிறது.

வடக்கில் முகாம்களில் உள்ள இராணுவத்தினரை இந்தப் பணிகளில் இருந்து விலக்கி வைக்காமல் தேர்தலை நடத்துவது எந்த வகையிலும் நேர்மையானதல்ல.

எனினும் செயற்பாடுகளை வரையறுக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது. நாட்டின் தெற்குப் பகுதிகளில் உள்ளது போல், பொலிஸாருக்குச் சிவில் பணிகள் வழங்கப்பட வேண்டும்.

இதன் மூலம் தற்போதுள்ள பிரச்சினைக்குத் தற்காலிகமாகவோ, குறுகிய காலத்திற்கோ தீர்வு காணமுடியும். வடக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை தெளிவாக உள்ளது. காரணம் போருக்குப் பின்னர் வடக்கில் பல தேர்தல்கள் நடத்தப்பட்டத்தை நாம் பார்த்தோம். ஆனால் தெற்கில் ஏனைய பிரதேசங்களில் இருக்கும் அரசியல் சுதந்திரம் வடக்கில் உள்ளது என்று கூறமுடியாது. எனினும் கடந்த காலங்களில் பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அகதி முகாம்கள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான முன்னேற்றமான பல விடயங்கள் நடந்துள்ளன.

இதனால் தேர்தல் நடத்தக் கூடிய தெளிவான சூழல் அங்கு காணப்படுகிறது. முன்னர் காணப்பட்ட கண்ணிவெடி அச்சுறுத்தல்கள், பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் என அனைத்தும் நீங்கியுள்ளன. தாம் ஏற்றுக்கொண்டதை நாம் நம்புவதைப் பிறருக்கு கூறும் சுதந்திரம் மனிதர்களுக்கு இருக்க வேண்டும் - என்றார்.

(த)

# ஆளும்தரப்பு வேட்பாளர்களுடன் மஹிந்த பேச்சு

லுக்காக வேட்பாளர்கள் என்ன செய்யவேண்டும் என்பது குறித்தும் விளக்கமளிக்கவுள்ளார் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் தேர்தல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக நான்கு பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் நானும் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் அடங்குகின்றனர்.

இதனடிப்படையில் வடமாகாணத்துக்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையிலும், வடமேல் மாகாணத்துக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், மத்திய மாகாணத்துக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலும் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதுதவிர மாவட்ட ரீதியிலும் பிரதேச சபை ரீதியிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் 172 வேட்பாளர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை (இன்று) சந்திக்கவுள்ளார்'' - என்றார் அமைச்சர் டலஸ்.

# இராணுவ ஆட்சி நிரூபணம்

பிரேமச்சந்திரன் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''வீதியில் இறங்கி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினால் மக்களை மனிதத் தன்மையுடன் அணுகி பிரச்சினைக்குத் தீர்வுகாண பொலிஸார் முயலவேண்டும். ஆனால், இலங்கையில் தற்போது கடமையில் இருக்கும் பொலிஸார் அரசுக்கு சார்பான ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் போது அமைதியாக இருக்கின்றனர். அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் போது பொலிஸாரும், இராணுவத்தினரும் வந்து தமது அடாவடியைக் காட்டிவிட்டுச் செல்கின்றனர்.

வடக்கில் தமிழ் மக்கள் மீது தொடரும் இவ்வாறான நடவடிக்கை தற்போது தெற்கில் சிங்கள மக்கள் மீதும் தொடர்கின்றது.

வடக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதும் இராணுவத்தின் கொடூர ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்கு கம்பஹா - வெலிவேரியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமது அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்று வலியுறுத்திய சிங்கள மக்கள் மீது இராணுவம் மற்றும் பொலிஸார் மிருகத்தனமான முறையில் தாக்குதல் நடத்தி ஒருவரைப் பலியெடுத்ததை தமிழ்க் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.'' - என்றார்.

# போதைப் பாக்கு விசாரணை உத்தியோகத்தர் மீது தாக்கு

இலக்கானார். அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில் உள்ள அவரது இல்லத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கொட்டன்களால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

தமது செயலக உத்தியோகத்தர் தாக்கப்பட்டார் என்பதை யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் உதயனுக்கு உறுதிப்படுத்தினார். (ங-5-400)


## அறிவித்தல்

ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவசிதம்பரம் கனகசேகரமும் பெண் ரஞ்சினியும் ஆகிய நாங்கள் பிரசித்த நொத்தாரிஸ் இ.நடேசன் முன்பாக 29.04.2012 திகதியில் 1039 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தத்துவப்பத்திர மூலம் அதே இடத்தைச் சேர்ந்த ரவிச் சந்திரன் புஷ்பாஜினி என்பவருக்கு கொடுத்த தத்துவப் பத்திரத்தை இத்தால் ரத்துச் செய்துள்ளோம் என இத்தால் அறிவிக்கின்றோம். குறித்த தத்துவப்பத்திரத்தின் பதிவு 59/90 யாழ்ப்பாணம் மேலதிக பதிவாளர் நாயகம் அலுவலகம்.

(30178) (10,16,14)

## துன்பம் தீர அருள் வாக்கு

குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராதநோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியில் உள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 03,04,05/08/2013 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூற உள்ளார்.

பெண்கள் சேலை, சல்வாருடன் வரவும்

தொடர்பு: ஞானவைரவர் ஆலயம்,
கலாசாலை வீதி,
2 ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
077 8012 226.

பூசை நேரம்: முற்பகல் 10.30 மணி
மாலை 4 மணி - அம்மா

(30165) (10,6)

## விற்பனைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் 11 அறைகளுடன் கூடிய வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 0090 425, 077 8803 887

(சி/10698) (10,16,14)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சு வீதிக்கு அருகில் உள்ள காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : 077 865 9103

(29611) (10,6)

## கணிதம் / விஞ்ஞானம்

ஆங்கிலமொழி, தமிழ்மொழிமூலம் 6இல் இருந்து G.C.E. O/L வரை ஆங்கிலமொழி மூல பட்டதாரி ஆசிரியரால் மிகச் சிறப்பாக தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். பிரபல கல்லூரிகளில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர், பெற்றோர்கள் மட்டும்.

தொடர்பு: 077 242 3400, 077 887 1217

(30175)(10,16)

## தேவை

அனுபவம் வாய்ந்த முகாமையாளர் மற்றும் பணம் சேகரிப்பாளர் (Cash Collector) தேவை. நன்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

இல.15, திருவள்ளுவர் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0212225688

(30172)

## தவறிவிட்டது

வளர்பிறை ஊரெழு கிழக்கு, சுன்னாகம் எனும் முகவரியைச் சேர்ந்த இராசேந்திரம் இமயகரன் (882162060 V) தேசிய அடையாள அட்டையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அடையாள அட்டையும், யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் 764 பஸ்சில் வரும்பொழுது தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலுள்ள அருள் புடைவையகத்தில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:077 311 2306, 077 346 8487

(சி/10748) (10,6)

## விற்பனைக்கு

அல்சேசன் ஆண், பெண் நாயும் பொமேரியன் ஆண், பெண் நாயும் டாசோன் ஆண், பெண் நாயும் 45நாள் பூர்த்தியான அதன் ஆண், பெண் குட்டிகளும் வெள்ளடியன், வண்ரம், கிளிக்கோழி, மணித்தாரா, வான்கோழி, கோழிகளும் குஞ்சுகளும் வளர்ப்பு கலர் மீன்களும்.

(30174)

தொடர்பு: லி.மயூரன், ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பூதராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்.

## தவறிவிட்டது

நாவாந்துறைக்கும் வட்டுக்கோட்டை சந்திக்கும் இடைப்பட்ட கல்லுண்டாய் வெளியில் Sony ரக கமரா தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: போனேஷ்-077 3671 545

Vision Fund Lanka

(30187) (10,6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



சரவணா ரெக்ஸ்

Office Ware Sarees
Cotton and Silks (With Blouse)
Rs. 500/= Only

சரவணா ரெக்ஸ்
01, சிவப்பிரகாசம் வீதி,
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்



(C/10240)(2,6)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 3
திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப 4 மணி
உரும்பிராய் நிலாஸ்ரார் வி.க. எதிர் உரும்பிராய் சரஸ்வதி வி.க.
பி.ப 4.45 மணி
புத்தூர் சரஸ்வதி வி.க.எதிர் வின்ஸ்ரார் வி.க .(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஓக. 3
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண "20/20" கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
காலை 8.30 மணி
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்.
நண்பகல் 12 மணி
ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகம். (ற-23)

★★★

பருத்தித்துறை, ஓக. 3
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள் :
பிற்பகல் 4 மணி
மன்னார் சென்.லூசியாஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம். (ற-34)

# கிண்ணம் வென்றது ஸ்ரீகாமாட்சி



பருத்தித்துறை, ஓக.3
பருத்தித்துறை தும்பளை மேற்கைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு நிதி திரட்டும் முகமாக கே.வி.கே. சமூக சேவை அமைப்பு நடத்திய யாழ். மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம்.

கடந்த வாரம் இடம்பெற்ற தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி அணி மோதியது.

15 பந்து பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 15 பந்து பரிமாற்றங்கள் முடிவில் 09 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் கஜீ 18 ஓட்டங்களையும், சிந்துஜன் 16 ஓட்டங்களையும், மயூரன், ஆதவன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் பந்து வீச்சில் நிருபன் 3 இலக்குகளையும், அனுசயந்தன், குணதீபன் ஆகியோர் தலா 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 பந்து பரிமாற்றங்கள் முடிவில் 09 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 08 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஜொனி 25 ஓட்டங்களையும், அனுசயந்தன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் சார்பில் பந்து வீச்சில் கஜீ, நிசாந்தன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், அஜன் 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஸ்ரீகாமாட்சி அணியின் கஜீ மற்றும் தொடர் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த ரஜீகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கே.வி.கே. சமூக சேவை அமைப்பின் தலைவர் க. செந்தூரன் தலைமையில் நடைபெற்ற இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி க.சர்வேஸ்வரன் மற்றும் வடமராட்சி லயன்ஸ் கழக உபதலைவர் லயன் வி.சிவயோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-34)

## நாளை இறுதியாட்டம்

பருத்தித்துறை, ஓக. 3
பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக். கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கழகத் தலைவர் திரு. என்.ஜெனார்த்தனன் தலைமையில் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இறுதியாட்டத்தைத் தொடர்ந்து வருடாந்தம் இடம்பெற்று வரும் வடமராட்சி நண்பர்களின் போரில் குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினரை எதிர்கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு.எஸ். தர்மராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ற-34)

## யூனியன், யாழ்ப்பாண கல்லூரிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 3
இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சம்மேளனம் நடத்தும் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட ஹொக்கிப் போட்டி மாத்தளை எட்சேட் பாக் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆண்களுக்கான ஆட்டத்தில் யூனியன் கல்லூரியும், பெண்களுக்கான ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

பெண்களுக்கான ஆட்டத்தில் நாவலப்பிட்டிய யசோதரா பெண்கள் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி களமிறங்கியது.

அதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து மாத்தளை விஜயா பெண்கள் கல்லூரி அணி மோதியது.

அதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான ஆட்டம் ஒன்றில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து எம்.சி.சி. கல்லூரி அணி மோதியது.

இதில் யூனியன் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## விளையாட்டு விழாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 3
வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது நிறைவையொட்டி நடத்தப்படும் விளையாட்டு விழா எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீச்சல் போட்டி, கட்டுமரம் வலித்தல், படகுப்போட்டி, நீச்சல், சைக்கிள் ஓட்டம் அடங்கிய குழுப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 10 கிலோமீற்றர் தூரம் சைக்கிள் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான 50 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி, பெண்களுக்கான 8 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான பாரம்தூக்கி ஓடுதல் போன்றவையும் பி.ப. 4 மணிக்கு கழக மைதானத்தில் தலையணை சண்டை, முட்டி உடைத்தல், தம்பதிகள் முட்டை பரிமாற்றம், கயிறு இழுத்தல் , கால் தேங்காய் உரித்தல் போட்டி, சாப்பாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் போட்டி ஏற்பாட்டாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ற-23)

# பார்படோஸ் அசத்தல் வெற்றி



கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் அன்ரிகுவா அணிக்கெதிரான போட்டியில் பார்படோஸ் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பார்படோஸில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பார்படோஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பெடுத்தாடச் சிரமமான இந்த ஆடுகளத்தில் பார்படோஸ் அணி ஆரம்பத்தில் மெதுவாகவே ஓட்டங்களைப் பெற்றது. ஆயினும் அது இறுதி நேரத்தில் உமர் அக்மலின் சிறப்பான ஆட்டம் காரணமாக போராடத்தக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக சொய்ப் மலிக் 30 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ஜொனதன் கார்ட்டர் 29 பந்துகளில் 31 ஓட்டங்களையும், உமர் அக்மல் 21 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்ரிகுவா சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 4 பந்துப்பரிமாற்றங்களில் 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷெல்டன் கொட்டரெல் 36 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கேமர் றோச், டேவ் மொஹமட், டெவோன் தோமஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அன்ரிகுவா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.

பார்படோஸ் அணியைப் போன்று ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்த அன்ரிகுவா அணி, தேவையான ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தது. துடுப்பாட்டத்தில் அன்ரிகுவா அணி சார்பாக ஜோன்சன் சார்ள்ஸ் 37 பந்துகளில் 44 ஓட்டங்களையும், பென் றோஹர் 17 [illegible]களில் 23 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 31 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பார்படோஸ் அணி சார்பாக ஆஷ்லி நேர்ஸ் 3 பந்துப் பரிமாற்றங்களில் 28 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், றயாட் எம்றிட் 3 பந்துப் பரிமாற்றங்களில் 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஷகிப் அல் ஹசன் 4 பந்துப்பரிமாற்றங்களில் 16 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், டுவைன் ஸ்மித் 4 பந்துப்பரிமாற்றங்களில் 25 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.


போட்டியின் நாயகனாக ஷகிப் அல் ஹசன் தெரிவானார். (ங)

## கூடைப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.3
மற்றிக்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

மின்னொளியில் இடம்பெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் சென். பற்றிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி களமிறங்கவுள்ளது.

இறுதியாட்ட நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்திரராக மற்றிக்ஸ் கோம்ஸ் நிறுவனத்தின இயக்குநர் ராஜ்குமாரும் கௌரவ விருந்தினர்களாக சண். தயாளன், கப்டன் சோமசுந்தரம், அருட்குமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)





# சொந்த மண்ணிலேயே இலங்கை தென்னாபிரிக்காவிடம் கவிழ்ந்தது

டுமினியின் சகலதுறையாட்டத்தின் மூலம் முதலாவது 20/20 போட்டியில் 12 ஓட்டங்களால் இலங்கையை அதன் சொந்த மண்ணிலேயே பந்தாடியது தென்னாபிரிக்கா.

கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக டேவிட்ஸும், டீ ஹொக்கும் களமிறங்கி அதிரடியாக ஆட முற்பட்டனர். ஆயினும் மிகச்சிறப்பாக பந்துவீசிய சுசித்திர சேனநாயக்க அவர்கள் இருவரையும் எல்.பி.டபிள்யூ முறையில் களத்தை விட்டு வெளியேற்றினார். டேவிட்ஸ் ஒரு ஓட்டத்துடனும், டீ ஹொக் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தடுமாறத்தொடங்கியது தென்னாபிரிக்கா. அந்த அணியின் தலைவரான டுபிளஸிஸும் ஒரு ஓட்டத்தோடு சேனநாயக்கவின் பந்தில் போல்டாகி நடையைக் கட்டினார். அதன் பின்னர் நிதான ஆட்டத்தில் அந்த அணிவீரர்கள் இறங்கியதால், ஓட்டவேகம் மந்தகதியிலேயே இருந்தது. ஓரளவு நின்று பிடித்த டீ வில்லியர்ஸும் 15 ஓட்டங்களில் மத்தியூஸின் பந்து வீச்சில் வீழ்ந்தார்.







ஆயினும் அதன் பின்னர் இணைந்து கொண்ட டுமினியும், மில்லரும் அணியைச் சரிவில் இருந்து மீட்கப் போராடினர். இவர்களின் பொறுப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்க அணி கௌரவமான இலக்கை நிர்ணயிக்க முடிந்தது. தென்னாபிரிக்க அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. மில்லர் 25 ஓட்டங்களையும், டுமினி 51 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சேனநாயக்க 3 இலக்குகளையும், மலிங்க, மத்தியூஸ், மெண்டிஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

116 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை துரத்தத் தொடங்கிய இலங்கையணிக்கு வழக்கம் போலவே குஷல் பெரேரா மோசமான ஆரம்பத்தை வழங்கினார். 11 ஓட்டங்களுடன் அவர் பவிலியன் திரும்ப, முதற்கோணல் முற்றும் கோணலாக மாறத் தொடங்கியது. குஷல் பெரேராவின் வழியில் டில்ஷான் 9 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் சந்திமால் 8 ஓட்டங்களுடனும் அணிவகுத்தனர். எனினும் அணிக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் துடுப்பாடினார் சங்ககார. ஒருமுனையில் சங்கா தனித்துப்போராடி அரைச்சதம் கடந்த போதும் மறுமுனையில் ஏனைய வீரர்கள் எவரும் பொறுப்புடன் ஆடவில்லை. இதனால் சங்காவின் போராட்டம் வீணாக, இலங்கை 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து, 103 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 12 ஓட்டங்களால் சொந்த மண்ணிலேயே இலங்கையணி பரிதாபத் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் டுமினி 3 இலக்குகளையும், மோர்கல், பர்னல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் கலக்கிய டுமினி தெரிவானார். (ங)

# கிளார்க் விஸ்வரூபம்: ஆஸி. அபாரம்

ஆஷஷ் தொடரின் 3ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது. முதல் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


ஓல்ட் ட்ரபோர்ட் மைதானத்தில் இடம்பெற்றுவரும் இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதலாவது இலக்குக்காக 16.5 பந்துப்பரிமாற்றங்களில் 76 ஓட்டங்களைப் பகிர்ந்தது. ஆஸ்திரேலிய அணி சார்பாக முதலாவது இலக்காக ஷேன் வொட்சன் 19 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அதன் பின்னர் உஸ்மான் கவாஜா சர்ச்சைக்குரிய விதத்தில் ஆட்டமிழந்தார். சிறப்பாக ஆடிய கிறிஸ் றொஜர்ஸும் வெளியேற ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களுடன் சற்றுத் தடுமாற்றத்தை எதிர்நோக்கியது.

எனினும் 4ஆவது இலக்குக்காக இணை சேர்ந்த மைக்கல் கிளார்க், ஸ்டீவன் ஸ்மித் இருவரும் பிரிக்கப்படாத 174 ஓட்டங்களை எடுத்து ஆஸ்திரேலிய அணிக்கு வலுச்சேர்த்தனர்.

முதல்நாள் முடிவில் துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களையும், கிறிஸ்றொஜர்ஸ் 84 ஓட்டங்களையும், ஸ்டீவன் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிறேம் ஸ்வான் 2 இலக்குகளையும், ரிம் பிரெஸ்னன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ங)



# ஏனிந்தத் தவறு?

## விளக்கம் கேட்கிறது ஆஸ்திரேலியா



இங்கிலாந்து- ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 ஆவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் வீரர் உஸ்மான் கவாஜாவுக்கு ஆட்டமிழப்பு வழங்கப்பட்டமை தொடர்பான விளக்கத்தை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோரியுள்ளது.

கிறேம் ஸ்வானின் பந்துவீச்சில் மற் பிரயரிடம் பிடிகொடுத்து உஸ்மான் கவாஜா ஆட்டமிழந்தார் என கள நடுவர் றொனி ஹில் தீர்ப்பு வழங்கினார். அந்தத் தீர்ப்புக்கு எதிராக மூன்றாவது நடுவரிடம் உஸ்மான் கவாஜா முறையிட்டார்.

மறு ஒளிபரப்புகளின் போது உஸ்மான் கவாஜாவின் துடுப்பில் பந்து பட்டிருக்கவில்லை எனத் தெளிவாகக் காணப்பட்ட போதிலும், மூன்றாவது நடுவரான குமார் தர்மசேனவுடன் கலந்துரையாடிய கள நடுவர் றொனி ஹில், தனது தீர்ப்பை மாற்றிக் கொள்ளாமல், உஸ்மான் கவாஜா ஆட்டமிழந்தார் என்றே தீர்ப்பு வழங்கினார். இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, உஸ்மான் கவாஜாவின் குறித்த ஆட்டமிழப்புத் தொடர்பான விளக்கத்தை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தங்களது பார்வையில் கள நடுவரின் தீர்ப்பும், மூன்றாவது நடுவரிடம் முறையிட்ட பின்னர் வழங்கப்பட்ட தீர்ப்பும் தவறானவை எனத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, தாங்கள் தொடர்ந்தும் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தின் ஆதரவாளர்களாகக் காணப்படுவதாகவும், நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தில் கிரிக்கெட்துறையினர் நம்பிக்கை கொள்ள வேண்டுமெனில் இது போன்ற தவறுகள் திருத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. (ங)

# அப்போ புலி....இப்போ நாய்

விலங்குகள் மீது பிரியம் கொண்டவர் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டோனி. புலி ஒன்றைத் தத்தெடுத்து வளர்த்து வந்த டோனி இப்போது நாய் குட்டியை தத்தெடுத்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் மீது ஆர்வம் கொண்ட டோனி, விலங்குகள் மீதும் பாசம் வைத்திருப்பவர். கடந்த 2011இல் மைசூர் உயிரியல் பூங்காவில் இருந்து ૭ வயதான புலியை டோனி தத்தெடுத்தார். இதற்கு அகஸ்தியா என்று பெயர் வைத்துள்ளார்.

இப்போது சிம்பாப்வே தொடரில் பங்கேற்காமல் ஓய்வு எடுக்கும் டோனி, தினமும் 'டுவிட்டரில்' பல செய்திகளை வெளியிட்டு அசத்துகிறார். இதனிடையே, ராஞ்சி விலங்குகள் அறக்கட்டளையில் இருந்து புதியதாக நாய் குட்டியை ஒன்றை அவர் தத்தெடுத்துள்ளார்.

இதன் புகைப்படத்தை ''டுவிட்டரில்' வெளியிட்டுள்ள டோனி, நான் புதிதாகத் தத்தெடுத்த பெண் நாய் குட்டியை 'லியா' என அழைக்கலாம்,'' என்று குறிப்பிட்டுள்ளார். இதைவிட அடிக்கடி விதவிதமான தகவல்களை டுவிட்டரில் வெளியிட்டு, எல்லோரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துவருகிறார்.

(ஙு)

# மீண்டும் மரியாதை



சம்பியன்ஸ் கிண்ணத்தில் கிடைக்கப்பெற்ற தோல்விகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்காமல், இந் தத் தொடரில் கிடைக்கப் பெற்ற வெற்றியை பாகிஸ்தான் ரசிகர்கள் கொண்டாட வேண்டும் – என்றார்

சம்பியன்ஸ்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காத நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரைக் கைப்பற்றி, அணி மீதான மரியாதையை மீண்டும் வென்றுள்ளதாக பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது - அவர்களை வெல்வது இலகுவானதாகக் காணப்படவில்லை எனத் தெரிவித்தார். எனினும், பாகிஸ்தான் அணி கடுமையாக வெற்றி பெற உழைத்தது. அனைவரும் இணைந்து செயற்பட்டு தொடரை வெற்றி கொண்டோம். சம்பியன்ஸ் கிண்ணத்தில் கிடைக்கப்பெற்ற தோல்விகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்காமல், இந்தத் தொடரில் கிடைக்கப் பெற்ற வெற்றியை பாகிஸ்தான் ரசிகர்கள் கொண்டாட வேண்டும் – என்றார்

பலமிழந்து போயுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியமை குறித்து அதிகம் பெருமை கொள்ள வேண்டுமா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போது ''எங்களையும் சில தருணங்களில் பாராட்டுங்கள்'' என சயீட் அஜ்மல் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் முதற் சுற்றோடு வெளியேறிய பாகிஸ்தான் அணி, மேற்கிந்தியத் தீவுகளில் ஒருநாள் சர்வதேசப்போட்டித் தொடரை 3:1 என்ற கணக்கிலும், 20/20 சர்வதேசப் போட்டித் தொடரை 2:0 என்ற ரீதியிலும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஙு)

Arul Study Circle
111, Bonjean Road, Kotahena, Colombo 13, T.P: 011 2331 495, 011 2470 148
G.C.E. (O/L) 2013 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு
Free Seminar
இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
09.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்)
ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்
10.08.2013 (சனி காலை 8.30 -மாலை 5.00. இருபாலாரும்)
யாழ் வீரசிங்கம் மண்டபம்
11.08.2013 (ஞாயிறு காலை 6.00 - மாலை 5.00 மாணவிகள் மட்டும்)
12.08.2013 (திங்கள் காலை 6.00 - மாலை 5.00 ஆண் மாணவர்கள் மட்டும்)
13.08.2013 (செவ்வாய் காலை 6.00 - மாலை 5.00 இருபாலாரும்)
உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்
16.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00 இருபாலாரும்)
நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அனைத்து O/L மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்
கடந்த 2010, 2011, 2012 ஆம் வருடங்களில் வெற்றிகரமாக இலவசக் கருத்தரங்குகளை நடத்தியதோடு இந்த வருடமும் சிறப்பாக நடத்தப்படுகின்றது.
இலவச கருத்தரங்கு முழு அனுசரணை வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி)
சம்பிரதாய பூர்வமாக வகுப்புகள் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.
குறிப்பு: முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்
★ கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2008, 2009, 2010, 2011, 2012, ஆகிய வருட க.பொ.த. (சா/த) பரீட்சை வினா-விடை புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ கணிதம் கடந்த 16 வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா - விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ அனைத்துப் பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (Tutes) வழங்கப்படும்.
★ விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (25 வருட கடந்தகால வினாவிடைத் தொகுப்பு)
பிரதான ஒழுங்கமைப்பாளர்:- பே.இளமுருகன் (ஆசிரியர் K.H.C)077 90 73 593
ஊடக அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/11071)(10.6.3)

உலகின் எந்த மூலைக்கும் படிக்க, உழைக்க எம்மிடம் மட்டுமே....
டென்மார்க்கில் படிக்க
இரண்டு இலட்சம் வரை உழைக்க
சட்ட ஆலோசனைக்கு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(30097)(10.6)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).
France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. சர்வதேச நிறுவனமொன்றில் French கற்றிட இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: விரைவில் ஆரம்பமாகிறது 11-1pm(சனி, ஞாயிறு)
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

மெய்யியல்
மீட்டல் விரிவுரைகள்
யாழ் பேராதனை வினா விடைக் குறிப்புக்கள்
GA.Q, B.A.I, B.A.II
யாழ்.துணைப்பாடங்கள்
சமூக உளவியல், விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்.
கலாநிதி
வே.யுகபால சிங்கம்
யாழ்ப்பாணக் கல்லூரி வர்த்தக வங்கிக்கு அருகில் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(30118)

SafePc
100% CLEAN NO VIRUSES NO SPYWARE
துரித கணினி பழுதுபார்க்கும் சேவை
உங்கள் இன்ரநெற்றில் பிரச்சினையா?
உங்களால் உங்களுடைய கணினியை சரியாக இயக்க முடியவில்லையா?
வைரஸ் தொல்லையால் அவஸ்தைப்படுகிறீர்களா?
உங்களுடைய கணினி, மடிக்கணினி, இன்ரநெற், எந்தவித பிரச்சினையானாலும்
நாங்கள் வருகிறோம். நீங்கள் அழைக்க வேண்டியது..........
021 5 67 57 47
SafePc கணினி கண்காணிப்பாளர்கள்

Sky Computers (Pvt) Ltd
இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகாமையில்)
விடுமுறைகால கணினி வகுப்புக்கள்ஆரம்பம்.
Ms office, DTP, Video Mixing, Mobile Repairing, Web Design, Graphic Design, Hardware, Computer Type Setting, Internet & E-mail, Kids Programme
TP:021-222-1417
ஆங்கிலம், சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் கணினிகள் வழங்கப்படும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.